www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2011
ரூ.10.00




# பாசிச ஜெயாவின் வழிப்பறிக் கொள்ளை!

படிப்பகம்

www.padippakam.com




# முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்! மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!

## – புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் சூளுரை

முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறித்து, பஞ்சைப் பராரிகளான பாட்டாளிகளின் முதல் சோசலிச அரசு உதித்த நாள் நவம்பர் 7,1917. கண்ணெக்கெட்டிய தூரம்வரை தீர்வுக்கான சாத்தியமே இல்லாத ஒரு கட்டமைப்பு நெருக்கடிக்குள், அதாவது மீளமுடியாத சமுதாயப் பொருளாதார நெருக்கடியில் ஏகாதிபத்திய முதலாளித்துவ அமைப்பு இன்று விழுந்து கிடக்கிறது. அதற்கு நிரந்தரமான அமைதியை வழங்க வல்லது பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சிதான்; உலக மக்களைக் காக்க வல்லது கம்யூனிசம் மட்டும்தான் என்பதை உணர்த்தி, உலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி மலர்ந்த 95-ஆம் ஆண்டு சோசலிசப் புரட்சி நாளை தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தாங்கள் செயல்படும் பகுதிகளில் எழுச்சியோடு கொண்டாடின. இப்புரட்சிகர அமைப்புகள் செயல்படும் பகுதிகள் அனைத்தும் அந்நாளில் விழாக்கோலம் பூண்டிருந்தன. நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இங்கேயும் ஒரு பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியைச் சாதிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அமைந்தன.

திருச்சியில், நவம்பர் புரட்சி நாளன்று காலையில் இப்பகுதியின் புரட்சிகர அமைப்புகள் இணைந்து கள்ளங்காடு பகுதியில் பட்டாசுகள் வெடித்து மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, காலை 10 மணியளவில் காந்திபுரம் 80 அடி ரோடு பகுதியில் பகுதிவாழ் உழைக்கும் மக்களை ஒருங்கிணைத்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தின. மாலையில் உறையூர் கைத்தறி திருமண மண்டபத்தில் நடந்த அரங்கக் கூட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பங்கேற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கி, முன்னணியாளர்கள் உரையாற்றினர். சிறுவர்-சிறுமியருக்கான மாறுவேடப் போட்டியில் பாரதிதாசன், பகத்சிங், பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் ஸ்டாலின், ஜான்சிராணி, அம்பேத்கர் ஆகியோர் வேடமிட்டு இளந்தோழர்கள் உரையாற்றிய காட்சியும், ம.க.இ.க. மையக்கலைக்குழுவின் கலை நிகழ்ச்சியும் சிறுவர்களின் கலைநிகழ்ச்சியும் போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சின. இன்றைய உலகளாவிய நெருக்கடிகளுக்கு பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியே ஒரே தீர்வு என்பதை உணர்த்திய இவ்விழா ஒரு புரட்சிகரப் பண்பாட்டு விழாவாக நடந்தது.



சென்னையில், புரட்சிகர அமைப்புகள் இணைந்து நடத்திய அரங்கக் கூட்டத்தில், ''நவம்பர் புரட்சி நாளை உயர்த்திப் பிடிப்போம்!'' என ம.க.இ.க. பெண் தோழர்களால் எழுதி இசைக்கப் பட்ட பாடலும், பெ.வி.மு தோழர்களின் ''பொண்ணாப் பொறந்தா'' என்ற நாடகமும், ம.க. இ.க. இளந்தோழர்களின் மாறுவேட நிகழ்ச்சியும், குறிப்பாக பகத்சிங் வேடமிட்டு வந்த இளந்தோழர் நாட்டையும் மக்களையும் விடுவிக்க ''இன்குலாப் ஜிந்தாபாத்!'' என்று முழங்கியதும் பெருத்த வரவேற்பைப் பெற்றன. பு.மா.இ.மு. தோழர்களின் தப்பாட்டமும், ''நான் உலகம், தொழிலாளி நானே உலகம்'' என்ற காட்சி விளக்கப் பாடலும், மாவீரன் திப்புசுல்தானின் வாழ்க்கையைச் சித்தரித்த ''ஒப்பற்ற மாவீரன்'' என்ற பாடலும், ''கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்'' என்ற பாடலும் போராட்டக் களத்துக்கு பார்வையாளர்களை இழுத்துச் சென்று உணர்வூட்டின. ஆக்சல் இந்தியா, மேத்தா மருத்துவமனை ஆகிய தொழிலகங்களில் சங்கம் அமைத்து வெற்றி பெற்ற போராட்ட அனுபவத்தை களப் போராளிகளான பு.ஜ.தொ.மு. தோழர்கள் நேருரை நிகழ்த்தினர். சிறப்புரையாற்றிய பு.மா.இ.மு. மாநில அமைப்பாளர் தோழர்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 2
டிசம்பர் 2011

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு:

# கருநாகத்தின் படையெடுப்பு!

ஒரே வணிக முத்திரை கொண்ட (Single brand) பொருளை விற்கும் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை 51 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிப்பதெனவும், பல்வேறு வணிக முத்திரைகள் கொண்ட (Multi brand) பொருட்களை விற்கும் சில்லறை வியாபாரத்தில் 51 சதவீத அளவிற்கு அந்நிய முதலீட்டை அனுமதிப்பது எனவும் மைய அமைச்சரவை முடிவெடுத்து அறிவித்திருக்கிறது. இம்முடிவின் மூலம், இந்தியாவெங்கிலும் சில்லறை வர்த்தகத்தை நம்பி வாழ்ந்துவரும் பல இலட்சக்கணக்கான குடும்பங்களை அழிவின் விளிம்பில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது, மைய அரசு.

சில்லறை வர்த்தகத்தில் நுழையும் அந்நிய நிறுவனங்கள், தாம் விற்பனை செய்யும் பொருட்களை இந்தியாவில்தான் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குறிப்பாக, உலக வர்த்தகக் கழக நிபந்தனைகளின் படி, இந்நிறுவனங்கள் தாம் விற்பனை செய்யும் பொருட்களில் 30 சதவீதத்தை சர்வதேச சந்தையிலிருந்து கொள்முதல் செய்து கொள்ள உரிமையுண்டு. இந்திய அரசும் இந்தச் சலுகையினை சில்லறை வர்த்தகத்தில் நுழையும் அந்நிய நிறுவனங்களுக்கு வழங்கிவிட்டு, அப்படிபட்ட சலுகை வழங்கப் படவில்லை எனப் புளுகி வருகிறது. எனவே, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நிறுவனங்கள் நுழைவதால் அண்ணாச்சி கடைகளுக்கு மட்டும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. இதனால் இந்தியாவிலுள்ள சிறுவீத உற்பத்தியாளர்களும் அழிவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது.

''இந்தியாவில் ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 53 நகரங்களில் மட்டுமே அந்நிய நிறுவனங்கள் சில்லறை வர்த்தகத்தில் நுழைவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். இதனால், சில்லறை வியாபாரத்தை நம்பி வாழும் குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்படாது'' என வாதாடுகிறது, மைய அரசு. எல்லாத் தொழில்களிலிருந்தும் துரத்தப்படும் பரிதாபத்துக்குரிய மக்கள், ஒரு பெட்டிக் கடையையோ மளிகைக்கடையையோ வைத்துப் பிழைத்துக் கொள்ள இந்தப் பெருநகரங்களில்தான் தஞ்சமடைந்துள்ளனர்; தஞ்சமடைய வருகின்றனர். இந்நகர்ப்புறங்களில் இத்தொழிலை நம்பி வாழ்ந்துவரும் 2.6 கோடி பேரின் வயிற்றில் முதலில் அடித்துவிட்டு, பிறகு மற்றவர்களைக் கவனிக்கிறோம் என்பதுதான் மைய அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டின் பொருள்.

இதுவொருபுறமிருக்க, ஏற்கெனவே சில்லறை வர்த்தகத்தில் நுழைந்துள்ள ரிலையன்ஸ் பிரெஷ், ஹெரிடேஜ், மோர் போன்ற நிறுவனங்களுக்கு, இந்தியாவின் சிறு நகரங்களில் தமது சூப்பர் ஸ்டோர்களைத் திறந்து கொள்ள தடை ஏதும் கிடையாது எனும்பொழுது, அவற்றோடு கூட்டுச் சேரவுள்ள அந்நிய நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடு நடைமுறையில் செல்லாக்காசாகத்தான் இருக்கும்.

விவசாயிகளிடமிருந்து தானியங்களைக் கொள்முதல் செய்யவும், அவற்றைப் பாதுகாப்பதற்கான கிடங்குகளைக் கட்டிக் கொள்ளவும் அந்நிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அனுமதி என்பது நடைமுறையில் உணவுப் பொருட்களைச் சட்டபூர்வமாக பதுக்கி வைத்துக் கொள்ள கொடுக்கப்பட்டுள்ள அனுமதி தவிர வேறெதுவும் கிடையாது. இதன்மூலம் இந்த அந்நிய நிறுவனங்கள் ஒருபுறம் இடைத்தரகர்களை ஒழிப்பது என்ற போர்வையில் உள்ளூர் வியாபாரிகள் முதல் தள்ளுவண்டிக்காரர்கள் ஈறாக இலட்சக்கணக்கான சிறு வியாபாரிகளைச் சந்தையிலிருந்து சிறுகச்சிறுக அப்புறப்படுத்தும்; இன்னொருபுறம், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளைக் குத்தகை விவசாயிகள் என்ற பெயரில் தமது கொத்தடிமைகளாக மாற்றும்.

தொடர்ச்சி 17-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

### பால் விலை - பேருந்துக் கட்டண உயர்வு:

# பாசிச ஜெயாவின் வழிப்பறிக் கொள்ளை!

**அரசுத்துறையைப் பாதுகாப்பதல்ல; தனியார்மயத்துக்கு வழிவகுப்பதே இக்கொள்ளையின் நோக்கம்.**

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து உழைக்கும் மக்கள் தத்தளிக்கும் நிலையில், பால் விலை மற்றும் அரசுப் பேருந்து, மின் சாரக் கட்டணங்களைக் கிடுகிடுவென உயர்த்தி தமிழகத்தின் ஏழை-எளிய, நடுத்தர வர்க்க மக்கள் மீது பொருளாதார ரீதியிலான அதிரடி பயங்கரவாதத் தாக்குதலை பாசிச ஜெயலலிதா அரசு ஏவிவிட்டுள்ளது. இதுவரை கண்டிராத படி, ஒரே நேரத்தில் சாதாரணப் பேருந்துக் கட்டணம் கி.மீ.க்கு 28 பைசாவிலிருந்து 42 பைசாவாகவும் , ஆவின் பால் விலையை ஒரு லிட்டருக்கு ரூ. 6.25 ஆகவும் உயர்த்தியுள்ள ஜெயா கும்பல், மின் கட்டணத்தை இரு மடங்காக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது. இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரோ, மாநிலமோ செய்திராத இக்கொடிய தாக்குதலால் சாமானிய மக்கள் நிலைகுலைந்து போயுள்ளனர். ஆட்சிக்கு வந்ததும் வாட் வரி மூலம் ரூ.4000 கோடிக்கு மேலாக வரி விதித்த பாசிச ஜெயலலிதா அரசு, இப்போது விலையேற்றம் - கட்டண உயர்வின் மூலம் ரூ. 11,000 கோடிக்கு மக்கள் மீது பெருஞ் சுமையை ஏற்றியுள்ளது.

பேருந்துக் கட்டணத்தை எவ்வித முன்னறிவிப்புமின்றி உயர்த்தியுள்ள பாசிச ஜெயா அரசு, வருவாயைப் பெருக்குவது, நட்டத்தில் இயங்கும் அரசுத் துறைகளை மீட்பது என்ற வக்கிர வாதங்களுடன் மக்களின் கோவணத்தையும் பிடுங்காத குறையாக கொள்ளையடிக்கக் கிளம்பியுள்ளது. உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணத்தால் அதிர்ச்சியடைந்த சாமானிய மக்கள் வேலைக்குப் போக முடியாமல் வீடு திரும்பிய அவலங்களும், மூன்று ரூபாயுடன் பேருந்தில் ஏறி, ஆறு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்த இயலாமல், ஒரு கி.மீ. தூரத்துக்கு மட்டும் பயணம் செய்து, பின்னர் வழியில் இறங்கிப் பலர் நடந்து சென்ற அவலங்களும் சாமானிய மக்களை வதைக்கும் ஜெயா அரசின் கொடுமையைப் படம் பிடித்துக் காட்டின.

அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் நட்டத்துக்கு அதிகார வர்க்கமும் அதனோடு கூட்டுச் சேர்ந்து ஆதாயமடையும் ஆளும் கட்சியினரும் நடத்திவரும் ஊழலும் கொள்ளையுமே முதன்மையான காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மை. அதிகார வர்க்க - ஆளும் கட்சி கூட்டுக் கொள்ளையை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து, நட்டத்தைக் கட்டண உயர்வின் மூலம் குறைக்கப் போவதாக பாசிச ஜெயா கூறுவது கடைந்தெடுத்த மோசடி. கூடுதல் வசூல், கூடுதல் ஊழலுக்கும் முறைகேடுகளுக்கும்தான் வழிவகுக்கப் போகிறது.

மேலும், ஆவின் நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக பாசிச ஜெயா கூறுவதே பொய்யானது. ‘‘தமிழகத்தில் இயங்கிவரும் 17 ஆவின் ஒன்றியங்களில் ஒரு சிலவற்றைத் தவிர, மற்ற அனைத்தும் நல்ல இலாபத்தில்தான் இயங்குகின்றன. உதாரணமாக, கோவை ஆவின் ஒன்றியம் ஆண்டுக்கு ரூ.15 முதல் 18 கோடிவரை இலாபம் ஈட்டித் தருகிறது. தனியார் நிறுவனங்கள் எல்லாம் கொள்ளை இலாபத்தில் இயங்கும்போது ஆவின்

திருவண்ணாமலையில் இருந்து தாம்பரம் வந்து இறங்க வேண்டிய கூலித்தொழிலாளர்களான செந்தில்-விஜயா தம்பதியினர், உயர்த்தப்பட்ட பேருந்துக் கட்டணத்தைக் கொடுக்க காசில்லாததால், பெருங்களத்தூரில் இறங்கி, இரும்புலியூர் பாலம் வழியாக தாம்பரத்திற்கு நடந்தே செல்லும் அவலம்.





படிப்பகம்

www.padippakam.com

மட்டும் எப்படி நட்டத்தைச் சந்திக்கும்?'' என்கிறார், கோவை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் காப்பாளரும், முன்னாள் கோவை ஆவின் தலைவருமான எஸ்.ஆர்.ராஜகோபால்.



பேருந்துக் கட்டணக் கொள்ளைக்கு எதிரான மக்களின் குமுறல்: தமிழகத்தின் பல பகுதிகளில் நடந்துள்ள தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு ஒரு சான்று.

விவசாயிகளுக்கு பால் கொள்முதல் விலையில் ரூ.2 மட்டுமே உயர்த்திக் கொடுத்துவிட்டு, அதே பாலைப் பொதுமக்களுக்கு ரூ. 6.25-க்கு உயர்த்தியிருப்பது பகற்கொள்ளையின்றி வேறென்ன? தனியார் பேருந்து முதலாளிகளும், தனியார் பால் நிறுவனங்களும் அரசின் முடிவை வரவேற்று ஆதரிப்பதிலிருந்தே யாருக்காக இந்த விலையேற்றமும் கட்டணக் கொள்ளையும் திணிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

தமிழக அரசுக்குத் தேவையான நிதியை மத்திய அரசு ஒதுக்கவில்லை என்றும், அது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகவும், இதன் காரணமாகவே பால் விலை, பேருந்துக் கட்டணங்களை உயர்த்துவதாகவும் பாசிச ஜெயா இப்பகற்கொள்ளைக்கு நியாயம் கற்பிக்கிறார். ஆனால், திட்டக்குழு விவாதத்தில் கலந்து கொண்டபோது, மாநில அரசு கேட்டதைவிட மத்திய அரசு அதிகமாகக் கொடுத்துள்ளது என்று பாராட்டியவர் தான், இந்தப் புளுகுணி ராணி.

அதேபோல, முந்தைய தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுகளால் ஏற்பட்ட இழப்புகளிலிருந்து அரசு நிறுவனங்களை மீட்கவே இக்கட்டண உயர்வு என்று பாசிச ஜெயா நியாயவாதம் பேசுவதும் பித்தலாட்டமானது. ஜெயா அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், கடந்த 4.8.2011-இல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது, மின்ஆளுகை முயற்சிகளில் தமிழகம் முன்னணியில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இப்படி ஒருபுறம் நிர்வாகம் சீராகவும் சாதகமான நிலையிலும் உள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துவிட்டு, மறுபுறம் முந்தைய தி.மு.க. அரசு தான் கட்டண உயர்வுக்குக் காரணம் என்று பழிபோட்டு தப்பிக்க முயற்சிக்கிறது பாசிச ஜெயா கும்பல்.

சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய வழக்கு நடந்து கொண்டிருந்த போதே, பழைய பாடத் திட்டத்தின் கீழ் அவசரமாக ரூ. 200 கோடி செலவில் பாடப்புத்தகங்களை அச்சிட்டு மக்கள் வரிப்பணத்தைப் பாழடித்தும், ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தை இழுத்து மூடிவிட்டு அங்கு சிறப்பு மருத்துவமனையை நிறுவப் போவதாக அறிவித்தும், ஐநூறு கோடி ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்ட அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தைக் குழந்தைகள் மருத்துவமனையாக்கப் போவதாகவும் பாசிசத் திமிருடனும் கோமாளித்தனமாகவும் உத்தரவிட்ட 'நிர்வாக சூரப்புலி' ஜெயா, நிர்வாகச் சீர்கேட்டைக் களையப் போவதாகக் கூறுவதை ஜெயா ஆதரவு பார்ப்பன ஊடகங்களைத் தவிர, எவரும் நம்பத் தயாராக இல்லை.

இப்பொருளாதாரத் தாக்குதலுக்கு எதிராக மக்களின் அதிருப்தி பெருகுவதைக் கண்டு, அதிகாரிகள் செய்த தவறுக்கு முதல்வரும் அரசும் பொறுப்பேற்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளதாக அங்கலாய்க்கிறது, பார்ப்பன தினமணி. ஆனால் இந்தப் பார்ப்பனத் துரோகக் கூட்டத்தைவிட, இந்த அரசு அமைவதற்குத் தோள்கொடுத்த போலி கம்யூனிஸ்டுகள் அதற்கான பொறுப்பேற்காமல், பாசிச ஜெயா கும்பலின் வழிப்பறிக் கொள்ளையை எதிர்ப்பதைப் போல பம்மாத்து செய்வதைத் தமிழக மக்கள் இனியும் சகித்துக் கொண்டிருக்கவே முடியாது.

உலக வங்கி, ஐ.எம்.எப்; உலக வர்த்தகக் கழகம் ஆகிய ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளின் கட்டளைகளை ஏற்று தனியார்மயம் - தாராளமயம் திணிக்கப்பட்டதிலிருந்து, மத்தியிலும் மாநிலங்களிலும் ஆளும் கட்சிகள் எவையானாலும், அவை உழைக்கும் மக்கள் மீது கடுமையான பொருளாதாரத் தாக்குதல்களைத் தொடுக்கின்றன. இப்போது இரண்டாம் கட்ட சீர்திருத்தங்கள் என்ற பெயரில் எந்த ஆட்சியானாலும், தனியார்மய - தாராளமயத் தாக்குதலை முன்னைவிடத் தீவிரமாகவும் மூர்க்கமாகவும் செயல்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இதற்கான வெள்ளோட்டமாகவே மக்கள் மீது இக்கொடிய தாக்குதலை பாசிச ஜெயா கும்பல் நடத்தியுள்ளது.

அரசு வருவாயைப் பெருக்குவது, சிக்கன சீரமைப்பு நடவடிக்கை என்று சொல்லிக் கொண்டு பிற துறைகளில் ஆட்குறைப்பு - வேலைநீக்கம் செய்த போதிலும், ஜெயா ஆட்சியில் போலீசுத் துறையில் ஆளெடுப்பும் அத்துறைகளுக்கான செலவுகளும் மானியங்களும் தொடர்ந்து அதி



படிப்பகம்

www.padippakam.com

கரிக்கப்படுகின்றன. ஏற்கெனவே போலீசு காவலரிலிருந்து ஆய்வாளர்கள் வரை அரிசி, சர்க்கரை முதலானவற்றை ரேஷன் கடைகளில் 50 சதவீத மானியத்தில் வாங்கிக் கொண்டிருப்பது போதாதென்று, தமிழ்நாடு போலீசாருக்கு மலிவு விலையில் பலவிதமான நுகர் பொருட்களை வழங்க இராணுவத்தினருக்கு இருப்பதைப் போன்ற சிறப்பு கேன்டீன்களை நிறுவ ஜெயலலிதா உத்தரவிட்டு, இதற்காக ஒரு கோடி ரூபாய் மானியமும் ஒதுக்கியுள்ளார். ஜெயலலிதா ஆட்சி என்றாலே அது போலீசாரின் ஆட்சிதான் என்பதோடு, மக்களின் சாதாரண எதிர்ப்பைக் கூட ஒடுக்குவதற்குத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மறுபுறம், பேருந்துத் தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை இலஞ்சம் போலக் கொடுத்து, அவர்களை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் ஜெயா கும்பலின் சதியை முறியடிக்க முன்வராமல் தொழிற்சங்கங்கள் முடங்கிக் கிடக்கின்றன.

ஆகவே, வழக்கமான கண்டனங்கள், அறப் போராட்டங்கள் மூலமாகவோ, இந்தக் கட்சிக்குப் பதிலாக அந்தக் கட்சி என்று மாறி மாறி ஓட்டுக் கட்சிக்குள்ளேயே தீர்வைத் தேடுவதன் மூலமாகவோ தீவிரமாகிவரும் பொருளாதாரத் தாக்குதல்களை முறியடிக்க முடியாது. கட்டண அதிகரிப்பு, விலையேற்றம், வரி விதிப்புகளை ஏற்க மறுத்து, தீவிரமாக்கப்படும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக அனைத்து உழைக்கும் மக்களும் எதிர்த்தாக்குதல் தொடுப்பதுதான் பாசிச ஜெயா கும்பலைப் பின்வாங்கச் செய்யும்.

● மனோகரன்

# “இப்படிப் போராடு!”

## - தமிழக அரசின் தீவட்டிக் கொள்ளைக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகள் நடத்திய போராட்டங்கள்



பகற்கொள்ளையடிக்கும் பாசிச ஜெயாவின் பேயாட்சிக்கு எதிராகத் தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் உழைக்கும் மக்களிடம் விரிவாகப் பிரச்சாரம் செய்து ஆர்ப்பாட்டங்களையும் மறியல் போராட்டங்களையும் நடத்தி வருகின்றன.

திருச்சியில் நவம்பர் 22-ஆம் தேதியன்று புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், ஒரு காட்சி விளக்க நாடகம் நடத்தப்பட்டது. பச்சைப் புடவையுடன் ஜெயலலிதா வேடமணிந்து வந்த ஒரு பெண் தோழர், ‘‘நான்தான் தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவி ஜெயலலிதா. விலையேற்றம் கடுமையாகத்தான் இருக்கும். பழகிக் கொள்ளுங்கள்’’ என்று கூறியதும், அவரை நோக்கி, ‘‘உனக்கு ஓட்டுப் போட்டதுக்கு இதுவும் சொல்லுவே, இதுக்கு மேலேயும் சொல்லுவே’’ என்று துடப்பக் கட்டை, செருப்புடன் தாக்கி ஒரு கொடும்பாவிக்குச் செய்வதையெல்லாம் பிற தோழர்கள் செய்தார்கள். அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டுள்ள உழைக்கும் மக்களின் குமுறலை வெளிப்படுத்தி நடத்தப்பட்ட இச்சிறு நாடகம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. கொடும்பாவிக்கு மாற்றாக, முதல்வரின் வேடத்துடன் உள்ள உயிருள்ள இக்கொடும்பாவி மீது தாக்குதல் நடத்தும் இந்நிகழ்ச்சியைக் கண்டு பீதியடைந்த போலீசு, ஆர்ப்பாட்டத்தை தடுத்து பெண்கள் - குழந்தைகள் உள்ளிட்டு 70 பேரைக் கைது செய்துள்ளது.

பாசிச ஜெயா கும்பலின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக, நவம்பர் 24-ஆம் தேதி சென்னை-ஆவடி பேருந்து நிலையத்தில் பிரச்சாரம் செய்த பு.மா.இ.மு. தோழர்கள் அனைவரும் சிவப்பு உடையணிந்திருக்க, இருவர் மட்டும் ஜெயலலிதா மற்றும் சசிகலாவைப் போல முகமூடியணிந்துவர, ஜெயலலிதா வேடமணிந்தவர், ‘‘தவிர்க்கவியலாத காரணத்தால் பேருந்துக் கட்டணம் உயர்த்தப்படுகிறது’’ என்று திமிராகக் கூற, உடனே தோழர்கள் ஜெயலலிதாவைச் சுற்றிவளைத்து கேள்விமேல் கேள்வி கேட்டுத் திணறடித்தனர். பின்னர், உழைக்கும் மக்களிடம் ‘‘பாசிச ஜெயா அரசின் வழிப்பறிக் கொள்ளையை முறியடிப்போம்! அதன் முதற்படியாக டிக்கெட் வாங்காமல் பயணம் செய்வோம்!’’ என்று அறைகூவி, தொடர்ந்து பல பேருந்துகளில் பிரச்சாரம் செய்தனர்.

அடுத்தநாள் இதே குழுவினர், சென்னை - அண்ணாநகர் வளைவிலிருந்து சென்ட்ரல் நோக்கிச் செல்லும் பேருந்தில் ஏறி, ‘‘நாங்கள் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யப் போகிறோம். எங்களுடன் இந்தப் போராட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்’’ என அறிவித்தனர். இதை வரவேற்று பேருந்தில் பலரும் டிக்கெட் வாங்கவில்லை. பின்னர் சென்ட்ரலிலிருந்து தேனாம்பேட்டை செல்லும் பேருந்திலும், அங்கிருந்து சேத்துப்பட்டு செல்லும் பேருந்திலும் பிரச்சாரம் தொடர்ந்தபோது, பேருந்தின் நடத்துனர் தேனாம்பேட்டை போலீசு நிலைய வாயிலில் பேருந்தை நிறுத்தி புகார் கொடுக்க முயன்றார். ஆனால் போலீசு அதிகாரியோ, இப்போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து, ‘‘போக்குவரத்துக்கழக டிப்போவில் வைத்து பஞ்சாயத்து பண்ணிக்கொள். இங்கே வராதே!’’ என்று நடத்துனரை விரட்டிவிட்டு, ‘‘அண்ணா மேம்பாலத்துக்கு அந்தப் பக்கமாகப் போய் போராட்டம் நடத்துங்க. இந்தப் பக்கம் எங்க லிமிட்ல வருது’’ என்று பு.மா.இ.மு. தோழர்களை அனுப்பி வைத்தார்.

புரட்சிகர அமைப்புகள் நடத்திய இப்போராட்டங்கள் முன்னுதாரணமிக்கதாகவும், குமுறிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களுக்குப் எப்படிப் போராட வேண்டுமென வழிகாட்டுவதாகவும் அமைந்தன.

- பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# “வல்லரசு கனவுக்கு நாட்டு மக்களைப் பணயம் வைக்காதே!”

## - கூடங்குளம் அணு உலைக்கு எதிராக மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஆர்ப்பாட்டம்

கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூடக் கோரி நடந்து வரும் மக்கள் போராட்டத்தை ஆதரித்தும், பன்னாட்டு முதலாளிகளின் இலாப வெறிக்காக நாட்டு மக்களைப் பலியிடத் துடிக்கும் ஆட்சியாளர்களை எதிர்த்தும், தமிழகமெங்கும் மனித உரிமை பாதுகாப்பு மையம் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, ‘‘3 சதவீத அணு மின்சாரத்திற்காக எதிர்காலச் சந்ததியினரைப் பலியிடாதே! பன்னாட்டுக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்காக இந்தியக் கடற்கரை முழுவதும் 36 அணு உலைகளை நிறுவத் துடிக்கும் மன்மோகன் சிங் கும்பல் ஒழிக! வல்லரசுக் கனவுக்கு நாட்டு மக்களைப் பணயம் வைக்காதே! இந்திய அரசு, இந்துவெறி பா.ஜ.க., காங்கிரசு கும்பலின் பொய்ப் பிரச்சாரங்களை முறியடிப்போம்! கூடங்குளம் - இடிந்தகரை மக்கள் போராட்டத்தில் ஒன்றிணைவோம்!’’ என முழக்கங்கள் எதிரொலிக்க மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சார்பில் கூடங்குளம் அணு உலையை மூடக் கோரி 16.11.2011 அன்று காலை 10 மணியளவில் விருத்தாசலம் பாலக்கரையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் குணசேகர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் வழக்குரைஞர் புஷ்பதேவன், செல்வகுமார், கதிர்வேல் பாலாஜி, செந்தாமரைக் கந்தன் ஆகியோரும் ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜுவும் சிறப்புரையாற்றினார்.



திருவண்ணாமலையில் துண்டுப் பிரசுரங்களுடன் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட ம.உ.பா.மையம், அதன் தொடர்ச்சியாக 23.11.2011 அன்று மாலை காந்தி சிலை சந்திப்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. வழக்குரைஞர் கண்ணன் தலைமையில், மாவட்டத் தலைவர் தோழர் பொன்.சுப்பிரமணியன், வழக்குரைஞர் சேகர், புவியன், மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு ஆகியோர் கண்டன உரையாற்றினர். திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டங்கள், அப்துல் கலாம் உள்ளிட்ட விஞ்ஞானிகள் ஏகாதிபத்தியங்களின் அடியாட்களாக பொய்ப்பிரச்சாரம் நடத்திவருவதைத் திரைகிழித்துக் காட்டி உழைக்கும் மக்களைப் போராட அறைகூவியழைப்பதாக அமைந்தது.

- பு.ஜ. செய்தியாளர்

# தியாகத் தோழர் செந்திலின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்! ரவுடியிசத்துக்கு எதிராகப் போராடுவோம்!!

ரவுடிகளின் அராஜகத்தை எதிர்த்துப் போராடி, கடந்த அக்டோபர் 26-ஆம் தேதியன்று ரவுடிகளால் படுகொலை செய்யப்பட்ட பு.ஜ.தொ.மு. தோழர் செந்திலின் தியாகத்தைப் போற்றியும்; அவரது உயரிய இலட்சியங்களை நிறைவேற்ற உறுதியேற்றும் நவம்பர் 6-ஆம் தேதியன்று மதுரை - ஒத்தக்கடையில் ம.க.இ.க; பு.ஜ.தொ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து நினைவேந்தல் கூட்டத்தை நடத்தின.



ம.க.இ.க. மையக்கலைக்குழுவின் தோழர் கோவன், தியாகத் தோழர் செந்திலின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அஞ்சலி செலுத்திய இக்கூட்டத்தில், நாம் தமிழர், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்ப்புலிகள், ஆதித்தமிழர் பேரவை, ம.தி.மு.க; இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ஆனைமலை பாதுகாப்பு இயக்கம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகளும், ம.உ.பா.மையத்தின் மதுரைக்கிளை இணைச் செயலரான வழக்குரைஞர் வாஞ்சிநாதன், ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர். தனியார்மய - தாராளமயத்தால் ரவுடியிசம் வளர்ந்து வருவதை விளக்கியும், பெருகிவரும் இந்த அபாயத்துக்கு எதிராக உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராட அறைகூவியும், தோழர் செந்திலின் தியாகத்தைப் போற்றியும் நடந்த இந்தக் கூட்டம் தோழர் செந்திலின் நினைவை மக்கள் மனங்களில் ஆழமாக விதைப்பதாகவும், ரவுடியிசத்துக்கு எதிராகப் போராட மக்களை அறைகூவுவதாகவும் அமைந்தது.

- பு.ஜ. செய்தியாளர், மதுரை



படிப்பகம்

www.padippakam.com

# அணுஉலையை ஆதரிக்கும் வல்லுநர்களின் பொய்யுரைகள்

**அணுஉலைகளை ஆதரிக்கும் அப்துல்கலாம் தொடங்கி அனைத்து வல்லுநர்களும் (அ)யோக்கிய சிகாமணிகள் என்பது அம்பலமாகிவிட்டது.**

**கூ**டங்குளம் அணு உலை தொடர்பான விவாதம், ‘அணுசக்தி பாதுகாப்பானதா, இல்லையா?’ என்ற சட்டகத்துக்குள்ளேதான் பெரும்பாலும் நடந்து வருகிறது. கூடங்குளம் அணு உலையை நிறுவுவதாக இருக்கட்டும், அணு மின்சாரம்தான் ஒரே மாற்று என்று மன்மோகன் சிங் தற்போது எழுப்பும் கூக்குரலாக இருக்கட்டும், இவை மறுகாலனியாக்க கொள்கைக்கும், பன்னாட்டு முதலாளிகளின் கொள்ளைக்கும் ஏற்ப நமது நாட்டின் மீதும் மக்களின் மீதும் திணிக்கப்பட்ட முடிவுகள். இந்த உண்மையை மறைத்துவிட்டு, தேசத்தின் மீதும் அறிவியலின் மீதும் உள்ள மாளாக் காதலின் காரணமாகத்தான் இம்முடிவுகள் எடுக்கப்பட்டதைப் போல அரசும் அதிகார வர்க்கமும் நடிக்கின்றன. இதனை அம்பலப்படுத்துவதுதான் இப்பிரச்சினையில் கேந்திரமானது.

‘ஏன் கூடாது கூடங்குளம் அணுஉலை’ என்ற தலைப்பில் சுவராத் ராஜு, எம்.வி.ரமணா என்ற இரு இயற்பியலாளர்கள் இந்து நாளேட்டில் (12, நவ.) ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றனர். அறிவியல் தொழில்நுட்ப ரீதியான கேள்விகளுக்குப் பின், அறிவியல் தெரியாத பாமர மக்களின் சார்பில் இறுதியாக அவர்கள் எழுப்பியிருக்கும் ஒரு கேள்வி முக்கியமானது. “கூடங்குளம் உலை அத்தனை பாதுகாப்பானதென்றால், ‘கூடங்குளம் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் அதனைத் தயாரித்த ரசிய நிறுவனம் சல்லிக்காசு கூட இழப்பீடு தரவேண்டாம்’ என்று இந்திய-ரசிய ஒப்பந்தத்தின் 13-ஆவது ஷரத்து கூறுகிறதே, அது ஏன்?” என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

விற்பனை செய்யப்பட்ட ஒரு பொருளில் உற்பத்தி சார்ந்த குறைபாடு (manufacturing defect) இருந்து அதனால் பாதிப்பு ஏற்பட்டால், உற்பத்தி செய்த நிறுவனத்திடம் இழப்பீடு கோருவதென்பது மிகச் சாதாரணமான நுகர்வோர் உரிமை. மின்விசிறி முதல் விமானம் வரை எல்லாப் பொருட்கள் விசயத்திலும் உள்ள இந்த உரிமை அணு உலைக்கு மட்டும் கிடையாதாம். “உற்பத்திக் குறைபாட்டினால் விபத்து நேர்ந்தாலும் கம்பெனி பொறுப்பல்ல” என்ற சட்டத் திருத்தத்தை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கும் அணு உலை பாதுகாப்பு சட்டத்தில் செய்ய வேண்டும் என்று அமெரிக்க, பிரெஞ்சு கம்பெனிகள் நிர்ப்பந்திக்கின்றன. இதனை ஏற்று அச்சட்டத்திற்கு திருத்தமும் கொண்டு வந்திருக்கிறார் மன்மோகன் சிங். (தி இந்து, நவ.12)

‘விபத்துக்கு வாய்ப்பே இல்லை’ என்று கூறும் பன்னாட்டு முதலாளிகள் இழப்பீடு பற்றி ஏன் அஞ்ச வேண்டும்? ஏனென்றால், அணுஉலை விபத்து சிறியதாக இருந்தாலும் அழிவு போபாலைக் காட்டிலும் பெரியதாக இருக்கும். இழப்பீடு பெரும் தொகையாக இருக்கும். பன்னாட்டு முதலாளிகள் தங்களது இலாபத்தைப் பணயம் வைக்க மாட்டார்களாம். ஆனால், கூடங்குளம் மக்களை உயிரைப் பணயம் வைக்கச் சொல்கிறது, அரசு.

இதற்காக விஞ்ஞானிகள், வல்லுநர்கள் என்ற பட்டங்களைச் சுமந்து திரியும் அயோக்கியர்களை அமர்த்தி அணு உலைக்கு ஆதரவாகக் கூவச் சொல்கிறது. இந்த ‘வல்லுநர்கள்’தான் நாட்டைக் கெடுப்பதில் முன்னோடிகள். சாதாரண பாட்டரி கம்பெனி என்று மக்கள் நம்பிக் கொண்டிருந்த யூனியன் கார்பைடு நிறுவனத்திற்குள் நச்சு வாயுவை உற்பத்தி செய்யத் திட்டம் வகுத்துத் தந்த விஞ்ஞானி, அதற்கு ஒப்புதல் தந்த அதிகாரி, மூச்சுத் திணறி இறந்த மக்களின் சவப்பரிசோதனை அறிக்கையில்கூட தில்லுமுல்லு செய்த மருத்துவர்களென எல்லா அயோக்கியர்களும் ‘வல்லுநர்கள்’தான்.

கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை நிரந்தரமாக நிறுத்தக் கோரி இடிந்தகரையில் நடந்துவரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு கொண்ட பகுதிவாழ் உழைக்கும் மக்கள்.





படிப்பகம்


கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்துக்கு எதிராக மீனவர்கள் நடத்திய கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்.

ஆபத்தான இரசாயன ஆலைகளுக்கு அனுமதி வழங்குவது முதல் காடுகளை அழித்துச் சுரங்கம் தோண்டச் சுற்றுச்சூழல் அனுமதி தருவது வரை எல்லாப் பித்தலாட்டங்களையும் முதலாளிகளுக்கு செய்து கொடுப்பவர்களும், விவசாயிகளுக்கே தெரியாமல் மரபீனி மாற்றம் செய்யப்பட்ட விதைகளைப் புகுத்தி, விவசாயப் பல்கலைக்கழகங்களைப் பன்னாட்டு நிறுவனங்களின் அடியாள் கழகங்களாக மாற்றி விவசாயிகளின் குடியைக் கெடுப்பதும் விஞ்ஞானிகளும் வல்லுநர்களும்தான்.

விஞ்ஞானத்தை நம்புவது வேறு, விஞ்ஞானிகளை நம்புவதென்பது வேறு. கூடங்குளத்தில் போராடும் மக்களையெல்லாம் பகுத்தறிவற்ற மூடர்கள் போல தனது (தினமணி) கட்டுரையில் சித்தரித்து, 'கெக்கெக்கே' என்று சிரிக்கிறார் நெல்லை சு.முத்து என்ற எழுத்தாளர். ஸ்ரீஹரி கோட்டாவில் சூடம் கொளுத்தி ஏவுகணை பத்தவைக்கும் கோமாளிகளுக்கு இவ்வளவு கொழுப்பு தேவையில்லை.

அணுகுண்டுக்கே அல்லேலுயா பாடியவரும், இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் எனும் அடிமை ஒப்பந்தத்தின் ஆதரவாளரும், தினமலரால் நேர்மையின் இருப்பிடம் என்று போற்றப்படுபவருமான அப்துல் கலாம் கூடங்குளம் மின் நிலையத்துக்குள் இரவு 1.30-க்கு நுழைந்து அதிகாலை 4 மணி வரை ஆய்வு நடத்தி விட்டு, 'கூடங்குளம் அணு உலை பாதுகாப்பானது' என்று 40 பக்க அறிக்கையை உடனே வெளியிட்டிருக்கிறார்.

'கலாம்தான் இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி' என்று நம்பும் பழ.நெடுமாறனால் கூட, அக்னி ஏவுகணையை விஞ்சும் வேகத்தில் கலாம் தயாரித்திருக்கும் இந்த அறிக்கையை நம்ப முடியவில்லை. ரசிய நிறுவனமான ''ஆட்டம் ஸ்ட்ராய் எக்ஸ்போர்ட்'' டின் இணைய தளத்தில் கம்பெனி விளம்பரத்துக்காக அவர்கள் வெளியிட்டுள்ள விவரங்களையே சுட்டுத் தயாரிக்கப்பட்டிருப்பதுதான் கலாமின் அறிக்கை.

கூடங்குளம் பகுதி நிலநடுக்கத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்படாது என்றும், நாகப்பட்டினத்தை 2004-இல் தாக்கிய சுனாமி கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கவில்லை என்றும் கலாம் கூறுகிறார். அரசு புள்ளிவிவரப்படியே கன்னியாகுமரியைத் தாக்கிய சுனாமியால் மாண்டவர்களின் எண்ணிக்கை 808. இப்பகுதியில் இதுகாறும் ஏற்பட்டுள்ள நிலநடுக்கங்கள் குறித்த விவரங்களையும் கூடங்குளம் போராட்டக் குழுவினர் பட்டியலிட்டுள்ளனர். சுனாமியின்போது, குமரிமுனை திருவள்ளுவர் சிலையின் உயரத்துக்கு-133 அடிக்கு - அலைகள் எழும்பின. ஆனால், கூடங்குளம் உலை 13.5 மீட்டர் (சுமார் 42 அடி) உயரத்தில் இருப்பதால், சுனாமி அலைகள் இதனைத் தாக்காது என்கிறார் கலாம். 133-ஐ விட 42 பெரிது என்பது கலாமின் கண்டுபிடிப்பு போலும்!

உலகம் முழுவதும் நடந்துள்ள அணு உலை விபத்துக்கள் இதுவரை ஆறே ஆறுதான் எனவும், இந்தியாவில் இதுவரை ஒன்றுகூட நடைபெறவில்லை என்றும் கூறுகிறார் கலாம். ஆனால், 1947-இலிருந்து 2008 வரை உலகெங்கிலும் 76 விபத்துகள் நடந்துள்ளன. இவற்றில் 56 விபத்துகள் 1986-இல் செர்நோபில் விபத்துக்குப் பிறகு நடந்தவை.

4, மே 1987-இல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உலைத்தண்டு சிதைந்து 2 ஆண்டுகள் மூடல். செலவு 300 மில்லியன் டாலர். 10, செப். 1989-தாராப்பூர் அயோடின் கசிவு - கதிர்வீச்சு 700 மடங்கு. செலவு 78 மில்லியன் டாலர். 3, பிப். 1995 -கோட்டா ராஜஸ்தான் - ஹீலியம்/கனநீர் கசிவு 2 ஆண்டு மூடல். செலவு 280 மில்லியன் டாலர். 22, அக். 2002 - கல்பாக்கம்-100 கிலோ சோடியம் (கதிர் வீச்சு) கசிவு. செலவு 30 மில்லியன் டாலர். (பொன்.ஏழுமலை, தினமணி, 24 நவ.) இவை இந்தியாவில் நடந்த சில விபத்துகள். இவற்றில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கானோர்; இறந்தவர்கள் பலர்.

மிகப்பெரும் விபத்துகளாக மாறியிருக்க வேண்டியவை, தொழில்நுட்ப வல்லுநர்களின் சமயோசிதத்தால் தடுக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை. கல்பாக்கம் உள்ளிட்ட எல்லா அணுஉலைகளைச் சுற்றியும் வாழும் மக்கள் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்றில் கலந்துள்ள கதிரியக்கத்தின் அளவு என்ன என்பதை வேறு யாரும் அளவிடுவதை அரசு அனுமதிப்பதே இல்லை. தேசத்தின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை என்று இவை தடை செய்யப்படுகின்றன.

செர்னோபில் விபத்தில் இறந்தவர்கள் வெறும் 57பேர் மட்டும்தான் எனப் புளுகுகிறார் கலாம். புற்றுநோய் வந்து 70,000 பேர் உயிரிழந்ததாகவும், இன்றும் பல்லாயிரம் பேர் அதன் பாதிப்பினால் புற்றுநோய்க்கு ஆளாகியிருப்பதா



படிப்பகம்

கவும் அமெரிக்காவின் நியு யார்க் அகாடமி ஆஃப் சயின்ஸ் கூறுகிறது. உலகெங்கும் உள்ள 136 அணு உலைகளைச் சுற்றி வாழும் மக்கள் மத்தியில் செய்யப்பட்ட மருத்துவ ஆய்வில், அவர்களிடையே புற்றுநோயும், ஊனமும் மிக அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.


கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்துக்கு எதிராக நடந்துவரும் பிரச்சாரத்தில் பங்கேற்று உரையாற்றும் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.உதயகுமார்.

ஃபுகுஷிமா விபத்துக்குப் பின் ரசிய அணு உலைகளைச் சோதித்த அந்நாட்டு விஞ்ஞானிகள், ''நிலநடுக்கம், தீ, வெள்ளத்தை எதிர்கொள்ளும் திறன் நமது உலைகளுக்கு இல்லை'' என்று அந்நாட்டு அரசுக்கு அறிக்கை கொடுத்துள்ளனர். கலாமோ கூடங்குளம் உலை 100 சதவீதம் பாதுகாப்பானது என்று கூறுகிறார். இந்த விசயத்தில் அணுசக்தித்துறை தலைவர் முகர்ஜியை, கலாமுக்கே அண்ணன் என்று சொல்லலாம். ஃபுகுஷிமா விபத்து பற்றி தொலைக்காட்சியில் செய்தி வந்த மறுகணமே, ''இது விபத்தல்ல, ஜப்பானிய விஞ்ஞானிகள் சோதனை செய்கிறார்கள்'' என்று இவர் இந்தியாவிலிருந்து அறிக்கை விட்டார். இதனைக் கேட்டு ஜப்பானிய விஞ்ஞானிகளே வெலவெலத்து விட்டனர்.

கலாம், முகர்ஜி போன்ற வல்லுநர்களின் பொய்களுக்கு மறுப்பெழுத பக்கங்கள் போதாது. கலாமின் பொய்களைக் காட்டிலும் கீழ்த்தரமானது, அவர் கூடங்குளம் மக்களுக்கு சிபாரிசு செய்திருக்கும் பத்து அம்சத் திட்டம். ''கூடங்குளத்தில் மருத்துவமனை, சாலை, தொழிற்சாலை, பள்ளி, விளையாட்டு மைதானம், 200 கோடிக்கு வளர்ச்சித் திட்டம்'' என்று பயாஸ்கோப் காட்டுகிறார் கலாம். ஓட்டை விலை பேசுவதையும், ஒரு பெண்ணின் மானத்தை விலை பேசுவதையும் விடக் கேவலமாக மக்களின் உயிரை விலை பேசுகிறார் இந்த 'விஞ்ஞானி'. கூடவே, கூடங்குளம் உலைக்கு தண்ணீர் கொண்டுவரும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, பேச்சிப்பாறை அணையிலிருந்து குடிநீர் கொண்டுவர வேண்டும் என்று கூறி இரு மாவட்ட மக்களுக்கும் சிண்டு முடிகிறார்.

அணுசக்தியை ஆதரிக்கும் அனைவரும் இதன் உற்பத்தி செலவு மற்றெல்லாவற்றையும் விடக் குறைவானது, சுற்றுச் சூழலை மாசுபடுத்தாதது என்றும் கூறுகின்றனர். ஆடு கால்பணம், சுமை கூலி முக்கால்பணம் என்பதுதான் அணுசக்தி. உற்பத்திச்செலவு குறைவு. அணுக்கழிவைப் பராமரிக்கும் செலவு அதிகம். அணு உலை 30 ஆண்டுகளில் மூடப்பட்டு விடும். அது தோற்றுவித்த கழிவின் கதிர்வீச்சு 25,000 ஆண்டுகள் நீடிக்கும். அதனைப் பாதுகாக்க பல்லாயிரம் கோடி செலவு. இதுதான் சுற்றுச் சூழலுக்கும் எதிர்கால சந்ததிக்கும் அணுஉலை விட்டுச் செல்லும் பரிசு.

கூடங்குளம் உலையின் அணுக்கழிவுகள் ரசியாவுக்குக் கொண்டு செல்லப்படும் என்று முதலில் ஒப்பந்தம் போடப்பட்டது. பின்னர், அது கூடங்குளத்திலேயே மறுசுழற்சி செய்யப்படும் என்றார் கூடங்குளம் உலையின் இயக்குநர் காசிநாத் பாலாஜி. கழிவைப் பாதுகாப்பாக ரயில் மூலம் வேறு இடத்துக்கு கொண்டு போய் விடுவோம் என்றது அணுசக்தித் துறை. அக். 7 அன்று பிரதமரைச் சந்தித்தபோது அணுக்கழிவை ஒரு சிறிய கண்ணாடிப் பந்துக்குள் உருக்கி அடைத்து விடுவோம் என்று சொல்லியிருக்கிறார் எஸ்.கே.ஜெயின். பயன்படுத்தப்படும் யுரேனியத்தில் 25% கழிவாகத் தங்கும் என்கிறார் அப்துல் கலாம். இரண்டு வாரங்களுக்குள் இத்தனை முரண்பட்ட பதில்கள் தரப்பட்டதாக அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் அம்பலப்படுத்துகிறார்.

> **''அணு உலை வேண்டாமென்பவர்கள் மின்சாரம் வேண்டாமென்று சொல்வார்களா?'' என்று மிரட்டுகிறார்கள் கலாம் ரசிகர்கள். மின்சாரத்தைப் போற்றுவதற்காக உயர்அழுத்த மின் கம்பியை முத்தமிடவா முடியும்?**

இந்த அணுக்கழிவிலிருந்துதான் அணு ஆயுதம் தயாரிக்கப்படுகிறது என்பதால், இது தேசப் பாதுகாப்பு இரகசியமாகிவிட்டது. இது பற்றி நம் நாட்டு மக்களுக்கு கூற மறுக்கும் அரசு, இதே விவரத்தை ஆண்டுதோறும் அமெரிக்காவுக்கு எழுதிக் கொடுக்கவும், அமெரிக்காவின் அடி



படிப்பகம்

www.padippakam.com

யாளான சர்வதேச அணுசக்தி முகமை இந்திய அணுஉலைகளைச் சோதனையிடவும் அணு மதிப்பதாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.




கூடங்குளம் மக்களுக்கு விளக்கமளிப்பதற்காக மத்திய அரசு அனுப்பி வைத்த வல்லுநர் குழுவிடம் 49 கேள்விகளைப் போராட்டக் குழுவினர் கொடுத்திருக்கின்றனர். அவற்றுக்கு வெளிப்படையாக பதிலளிக்காமல், ''இந்தக் கேள்விகளையெல்லாம் உங்களுக்கு யார் தயாரித்துக் கொடுத்தார்கள்?'' என்று எதிர்க்கேள்வி எழுப்பியிருக்கிறது வல்லுநர் குழு. (http://www.dianuke.org/koodankulamudayakumar)

இந்திய அரசின் இந்த அணு உலைக் காதல் எப்போது உருவானது? இரான்-இந்தியா எரிவாயுக் குழாய் திட்டம் கையெழுத்தாகவிருந்த சூழ்நிலையில், 2005- இல் இந்தியாவுக்கு வந்த அமெரிக்க வெளியுறவு செயலர் கண்டலிசா ரைஸ், ''இரானுடன் சகவாசம் வேண்டாம். அமெரிக்காவிலிருந்து அணுஉலை தருகிறோம், அணுசக்திதான் சுற்றுச்சூழலுக்கு நல்லது'' என்று அறிவுரை கூறினார். ''அப்படியிருக்கும்போது 30 ஆண்டுகளாக அமெரிக்காவில் ஏன் ஒரு அணுஉலை கூட அமைக்கவில்லை?'' என்று அந்த அம்மையாரை மன்மோகன் கேட்கவில்லை.

2050-ஆம் ஆண்டுக்குள் ஆயிரம் மெகாவாட் திறனுள்ள 208 உலைகளை நாம் சுயசார்பாக அமைக்க முடியும் என்றும் யாரையும் சார்ந்திருக்கத் தேவையில்லை என்றும் 2004-இல் இந்திய அணுசக்தி துறை கூறியது. 2005 -இல் அமெரிக்காவின் உபதேசத்தைக் கேட்டபின், ''அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போடாவிட்டால் ஒரு அணு உலைகூட இயங்க முடியாது'' என்று பல்டியடித்தார் மன்மோகன். இப்போது, 2050-க்குள் 1000 மெகாவாட் திறனுள்ள 655 உலைகளை அமைத்து, 6.5 லட்சம் மெகாவாட் அணுமின்சாரத்தை உற்பத்தி செய்யப்போவதாகப் பேசியிருக்கிறார் மன்மோகன். அதாவது இந்தியாவின் 3000 கி.மீ. நீளக் கடற்கரையில் 55 கி.மீட்டருக்கு ஒரு அணு உலை! (டாக்டர். கோபாலகிருஷ்ணன், முன்னாள் தலைவர், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையம், Daily News and Analysis, April 4, 2011) பேரழிவுக்கு இதைக் காட்டிலும் குறுக்கு வழி உண்டா?

ஜெர்மனி அணு உலைகளை மூடுகிறது. பிரான்சும் ஜப்பானும் குறைக்கின்றன. இந்தியா அதிகரிக்கிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் உலைகளைப் போல 4 மடங்கு விலையில் இவை அமெரிக்க, பிரெஞ்சு கம்பெனிகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகச் சொல்கிறார், கோபாலகிருஷ்ணன்.

வால்மார்ட்டுக்காக சிறுவணிகர்களை அழிப்பதையும், போஸ்கோவுக்காக காடுகளை அழிப்பதையும் முன்னேற்றம் என்று சொல்வதைப் போலத்தான், அணு உலைக்காக மக்களை அழிப்பதையும், அணு உலைகளை இறக்குமதி செய்து உள்நாட்டு அணுஅறிவியலை அழிப்பதையும் முன்னேற்றம் என்கிறார் மன்மோகன் சிங். ''அணு உலை வேண்டாமென்பவர்கள் மின்சாரம் வேண்டாமென்று சொல்வார்களா?'' என்று மிரட்டுகிறார்கள் கலாம் ரசிகர்கள். மின்சாரத்தைப் போற்றுவதற்காக உயர்அழுத்த மின்கம்பியை முத்தமிடவா முடியும்?

மக்களை மரணத்தின் விளிம்பில் நிறுத்தியாவது உற்பத்தி செய்தே ஆகவேண்டிய இந்த மின்சாரத்தால் பயனடைபவர்கள் யார்? ''1995- இல் இந்தியாவின் மின் உற்பத்தித் திறன் 81,000 மெகாவாட். அப்போது 52% கிராமங்களுக்கு மின்வசதி கிடையாது. இன்று உற்பத்தித்திறன் 1.82 லட்சம் மெகாவாட். இன்றும் 42% கிராமங்கள் இருட்டில்தான் உள்ளன'' (இந்தியா டுடே, நவ.30, 2011) சிறு நகரங்களும் சிறு தொழில்களும் மின்வெட்டால் மடிந்து கொண்டிருக்கின்றன. பெருநகரங்களில் பன்னாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், நுழைவாயில் முதல் கக்கூசு வரை குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ஷாப்பிங் மால்கள், நட்சத்திர விடுதிகள், பணக்காரர்களின் வீடுகள் ஆகியவற்றுக்குத்தான் தடையற்று மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. உன்னுடைய முன்னேற்றத்துக்காகவும், ஆதாயத்துக்காவும், சொகுசுக்காகவும் நாங்கள் ஏன் அழியவேண்டும் என்பதுதான் நம்முடைய கேள்வி.

கடைசியாக, ''அறிவியலுக்காக மேரி க்யூரி தியாகம் செய்யவில்லையா?'' என்று கேட்டிருக்கிறார் கலாம். அவருடைய வாதத்தின்படி போபாலில் கொல்லப்பட்ட மக்கள் வேதியியலின் முன்னேற்றத்துக்காகத் தியாகம் செய்தவர்கள். ஹிரோஷிமாவில் கொல்லப்பட்ட மக்கள் அணு விஞ்ஞானத்தின் முன்னேற்றத்துக்காக உயிர் கொடுத்த தியாகிகள்!

அப்படியானால், குண்டு வீசியவர்கள்? அவர்களை விஞ்ஞானிகள் என்று யாரும் அழைத்ததில்லை. எனினும், அப்துல் கலாம் விஞ்ஞானி என்றுதான் அழைக்கப்படுகிறார். இடக்கரடக்கலாக இருக்கக்கூடும்!

● தொரட்டி



படிப்பகம்

www.padippakam.com

# “கூடங்குளம் அணுஉலையை இழுத்து மூடு!”

## - மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கருத்தரங்கம்

கூடங்குளம் போராட்டத்துக்கு எதிரான அவதூறுகள், அடக்குமுறைகளை அரசு முடுக்கி விட்டிருக்கும் சூழலில் ‘‘பன்னாட்டு முதலாளிகளின் இலாப வெறிக்கான கூடங் குளம் அணு உலையை மூடுவோம்!’’ என்ற முழக்கத்தை முன்வைத்து மனித உரிமைப் பாதுகாப்பு மையம் கன்னி யாகுமரி மாவட்ட கிளை சார்பாக 26.11.11 அன்று நாகர் கோயில் ஜெபமாலை திருமண மண்டபத்தில் கருத் தரங்கம் நடத்தப்பட்டது. கருத்தரங்கிற்கு முன், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்களும் தோழமை அமைப்புகளின் செயல்வீரர்களும் கடற்கரை கிராமங்களிலும் நாகர்கோயில் நகரிலும் அணுசக்திக்கு எதிராக பிரச்சாரம் செய்தனர். நாகர்கோயில் நகரத்திலும், சுற்றுவட்டார நகரங்களிலும், மீனவ கிராமங்களிலும் சுமார் ஒரு வாரகாலம் மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற் கொண்டனர்.

கூடங்குளம் போராட்டத்துக்கு எதிராகக் கொச்சை யான முறையில் அரசு மேற்கொண்டு வரும் அவதூறு பிரச் சாரங்கள் மற்றும் அணு உலைக்கு ஆதரவான பொய்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு நகர்ப்புற மக்கள் மீது தாக்கம் ஏற்படுத்தியிருப்பதை பிரச்சாரத்தின்போது பார்க்க முடிந்தது. ‘‘மின்சாரம் வேண்டும், அணு உலை கூடாதா?’’ என்ற குதர்க்கமான கேள்வி, ‘‘அணுசக்தி இருந்தால்தான் அணுகுண்டு தயாரிக்க முடியும், வல்ல ரசாக முடியும்?’’ என்ற தேசவெறி, ‘‘கலாம் போன்ற விஞ்ஞானிகளே சொல்லும்போது அது எப்படித் தவறாக இருக்க முடியும்’’ என்று கேட்கும் பாமரத்தனம், ‘‘இது இந்தியா வல்லரசாவதை விரும்பாத வெளிநாட்டு சக்திகள், கிறித்தவ நிறுவனங்களின் சதி’’ என்ற ஆர்.எஸ்.எஸ்-காங்கிரசு கூட்டுப் பிரச்சாரம் போன்ற வாதங்களை பிரச்சாரம் செய்த தோழர்கள் எதிர்கொண்டு பதிலளித்தனர். நாகர்கோயில் சுற்றுவட்டாரம் முழுவதும் பிரச்சாரம் செய்ததன் விளைவாகக் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் உள்ளூர் மக்கள் பெரு மளவில் வந்து கலந்து கொண்டனர்.

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் சார்பாக கருத்தரங்கில் கலந்து கொண்ட மனோ தங்கராஜ், போராட் டத்திற்கு எதிராகப் பரப்பப்படும் அரசின் பொய்யுரை களுக்கு ஆணித்தரமாக பதில் கூறினார். நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடும் மக்களின் பிரச்சினைகளைப் பரிசீலிக்க வேண்டிய அரசு, அவதூறு களை பரப்புவதும், போலீசை வைத்து மிரட்டுவதும், பொய் வழக்குப் போடுவதும் நியாயமற்றது என்றும்; எப் படிப்பட்ட அடக்குமுறைகளைக் கையாண்டாலும் இடிந்தகரை மக்கள் இறுதிவரை எதிர்த்துப் போராடு வரென்றும், அதற்கு எல்லாத்தரப்பு மக்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

எழுத்தாளர் முத்துக்கிருஷ்ணன், செர்னோபில் தொடங்கி ஜப்பானின் புகுஷிமா வரையிலான விபத்துகள் பற்றி புள்ளிவிபரத்துடன் விளக்கினார். அணு உலைகளில் விபத்து ஏற்பட்டால் மட்டுமே ஆபத்து என்பது பொய். அதன் இயல்பான இயக்கத்தி லிருந்தே கதிர்வீச்சு ஏற்படுகிறது என் பதற்கு தாராபூர், கல்பாக்கம், கைகா ஆகிய அணு உலை பகுதிகளில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து அதை அவர் நிறுவினார். அணு மின்சார உற் பத்தி செலவுமிக்கது, ஆபத்தானது, அதன் கழிவுகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பாதுகாக்கப்பட வேண்டியது. அதற்கு பதில் மாற்று சக்திகள் மூலமாக மின்சாரம் தயா ரிக்க முடியும். குறிப்பாக, தார்பா லைவனத்தில் 5 ஆயிரம் கிலோமீட் டர் சுற்றளவில் சூரிய மின்சாரம் உற் பத்தி செய்யலாம். முதலீடும், பரா மரிப்பு செலவும் குறைவானவை என்பதை சிறப்பாக விளக்கிப்






படிப்பகம்

www.padippakam.com



பேசினார். கூடவே அப்துல் கலாமின் கோமாளித்தனங்களைக் கோடிட்டுக் காட்டவும் அவர் மறக்கவில்லை.

மதுரை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் லஜபதிராய் அணு விபத்து இழப்பீட்டு சட்டம் எங்ஙனம் மோசடியானது என்பதை விளக்கியதுடன், கூடங்குளம் அணு உலைக்குத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும் என்ற வினாவை எழுப்பினார். ''அணு உலை மூலம் வெப்பம் மட்டும் பெறப்படுகிறது. காந்தச்சட்டத்தைச்சுழற்றுவதற்கான ஆற்றல் நீராவி மூலமாக பெறப்படுகிறது. நீராவிக்குத் தேவையான தண்ணீர் குமரி மாவட்டத்தில் உள்ள கோதையாறு, பேச்சிபாறை, பெருஞ்சாணி, சித்தாறு1, சித்தாறு2 ஆகிய அணைகளிலிருந்து எடுக்கின்ற திட்டம் உள்ளது. அந்த அணைகளில் இருந்து நீர் எடுக்கப்பட்டால் குமரி மாவட்ட விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேற்றப்படுவார்கள். அணு உலையால் ஏற்படும் பாதிப்புகள், அதை ஆதரிக்கின்ற பா.ஜ.க; ஆர்.எஸ்.எஸ்; காங்கிரஸ், சாதிச்சங்கங்கள் எல்லோரையும்தான் பாதிக்கும்'' என எச்சரிக்கை விடுத்தார். குமரி மாவட்டப் பாசன விவசாயிகள் சங்க தலைவர் வின்சாண்டோவும் ''நீர்ப் பங்கீட்டில் ஏற்கெனவே சிக்கல் உள்ள நேரத்தில் அணு உலைக்கு நீர் எடுக்கப்பட்டால், குமரி மாவட்டம் முழுவதும் பாலைவனமாக மாறிவிடும்'' என்பதை அழுத்தம் திருத்தமாக கூறினார்.

அடுத்து, பன்னாட்டு அணு உலை அரசியலும் காங்கிரஸ், ஆர்.எஸ்.எஸ்; பா.ஜ.க.வின் வல்லரசுக்கனவும் பற்றி மக்கள் கலை இலக்கிய கழகத்தின் மாநில இணைச் செயலாளர் காளியப்பன் பேசினார். ''இந்தியாவில் 60 விழுக்காடு மக்கள் அன்றாடம் 20 ரூபாயில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான கிராமங்கள் மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. விவசாயம் சிறு வணிகம், எல்லாம் அழிக்கப்பட்டு வருகிறது. இந்த லட்சணத்தில் இவர்கள் வல்லரசுக் கனவு காண்கிறார்கள். வல்லரசுக் கனவு உழைக்கு மக்களுக்கு எதிரானது'' என்பதை விளக்கினார்.

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, ''இடிந்தகரை மக்கள் போராட்டம் இந்தியா முழுவதும் பரவட்டும்,'' என்று அறைகூவல் விடுத்தார். ''சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் மக்கள் போராடியதன் விளைவாக தங்களது மண்ணை அவர்களால் காப்பாற்ற முடிந்தது. கூடங்குளத்தில் அணு உலை வேண்டாம் என்று 1988 முதலே மக்கள் போராடி வருகின்றனர். ஏன் போராடவில்லை என்று கேட்பது நியாயமில்லை. மனித குலத்திற்கே எதிரான இப்படிப்பட்ட அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து அனைவரும் போராட வேண்டும். அப்துல்கலாம் பெரிய விஞ்ஞானி, மதிக்கத் தகுந்தவர் என்கிறார்கள். அவரை சட்டையைக் கழட்டி அவமதித்தாலும் அமெரிக்காவுக்குப் போகிறார். இங்கே இடிந்தகரை வந்து மக்களைச் சந்திக்க மறுக்கிறார். இடிந்தகரையில் உள்ள ஒரு மூதாட்டிக்கு பதில் சொல்ல அவரால் முடியாது. மக்களுக்காகவும் தாய்நாட்டிற்காகவும் போராடி உயிர்நீத்த கட்டபொம்மன், மருது, திப்பு, பகத்சிங் வாரிசுகளாக நின்று நாம் போராட வேண்டும். அவர்கள் தோற்றாலும் மக்களின் மனங்களை வென்றார்கள். அதுபோல் நம்முடைய போராட்டம் மகத்தான மக்களின் போராட்டமாக இருக்க வேண்டும்'' என்று அறைகூவல் விடுத்தார்.

மனித உரிமைப் பாதுகாப்பு மையம் மதுரைகிளையின் துணைச் செயலாளர் உயர் நீதிமன்ற வழக்குரைஞர் வாஞ்சிநாதன் கருத்தரங்கத்திற்கு தலைமையேற்றார். குமரி மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் சிவராசபூபதி வரவேற்றார். அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் சட்ட ஆலோசகர் வழக்குரைஞர் சிவசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். இந்து மகாசபை என்றொரு இந்து வெறி அமைப்பு கருத்தரங்கிற்கு எதிராக அவதூறு பிரச்சாரம் செய்திருந்தது. கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு சுப.உதயகுமார் குமரி மாவட்டத்துக்குள் நுழைந்தால் அவரை உளவுப்படை கைது செய்யும் என்று தினமலர் செய்தி வெளியிட்டது. தினமலரை அம்பலப்படுத்தி நாகர்கோயில் நீதிமன்றம் மற்றும் நகரம் முழுவதும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொண்டது. திட்டமிட்ட இத்தகைய அவதூறு பிரச்சாரங்களை நிராகரித்து, திரளான மக்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

– பு.ஜ.செய்தியாளர், நாகர்கோயில்



படிப்பகம்

www.padippakam.com

# தியாகத் தோழர் கிஷன்ஜிக்கு வீரவணக்கம்!

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்) -இன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான கிஷன்ஜி என்றழைக்கப்படும் தோழர் மலோஜுலா கோடேஸ்வர ராவ், மத்திய ரிசர்வ் போலீசு படையினரால், 24.11.2011 வியாழனன்று படுகொலை செய்யப்பட்டு தியாகியானார். மேற்கு வங்க மாநிலம், மேற்கு மித்னாபூர் மாவட்டத்தைச் சேர்ந்த புரிசோல் காட்டுப் பகுதியில் நடைபெற்ற துப் பாக்கிச் சண்டையில் அவர் கொல்லப்பட்டதாக போலீசு தெரிவித்தது. துப்பாக்கிச் சண்டை நடந்ததாகக் கூறப் படும் இடம், ஜம்போனி போலீசு நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலும், அரசு விவசாயப் பண்ணையி லிருந்து 3 கி.மீ. தொலைவிலும் உள்ள ஆள் நடமாட் டமும் போலீசு நடமாட்டமும் அதிகமுள்ள இடமென் பதால், அங்கே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகக் கூறுவதே சந்தேகத்திற்குரியது என்று கூறியிருக்கின்றன, சில பத்திரிகைகள்.

முந்தைய நாளன்று, ஆயிரம் பேர்கொண்ட படை யினர் கிஷன்ஜியைச் சுற்றி வளைத்துவிட்டதாகவும், ஆனால், இறுதி நேரத்தில் அவர் தப்பிவிட்டதாகவும் போலீசு செய்தி வெளியிட்டது. தோழர் கிஷன்ஜி நவம்பர் 23 அன்றே கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப் பட்டு, நவம்பர் 24 அன்று போலி மோதலில் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று தோழர் வரவரராவ் குற்றம் சாட்டினார். கொல்கத்தாவைச் சேர்ந்த ஏ.பி.டி.ஆர். என்ற சிவில் உரிமை அமைப்பின் தலைவரும், மாவோயிஸ்டு களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மம்தா அரசு நியமித்துள்ள குழுவின் உறுப்பினருமான சுஜாதோ பத்ரோவும், வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் குருதாஸ் தாஸ்குப்தாவும் இது போலி மோதல் கொலை என்றே கூறியிருக்கின்றனர்.

இது போலி மோதல் கொலை அல்ல என்றும், குறிப் பான உளவுத் தகவல்களின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட 'சுத்தமான' நடவடிக்கைதான் என்றும் கூறியிருக்கிறார், மத்திய ரிசர்வ் போலீசு படையின் டைரக்டர் ஜெனரல் விஜயகுமார். போலீசின் வாய் சுத்தம் நாம் அறிந்ததுதான் என்பது ஒருபுறமிருக்க, விஜயகுமார் தமிழகத்தில் இருந்தபோது, அவர் தலைமையிலான சிறப்பு அதிரடிப் படை வீரப்பன் பிணத்தைச் 'சுட்டுக் கொன்ற கதை' யும் நமக்குத் தெரியும்.

தோழர் கிஷன்ஜியின் உடலை அடையாளம் காண்ப தற்காக நவம்பர் 26 அன்று மித்னாபூர் மருத்துவமனைக்கு நேரில் சென்ற வரவரராவும், தோழர் கிஷன்ஜியின் அண்ணன் மகள் தீபாவும் கொடூரமாகச் சித்திரவதை செய் யப்பட்டதற்கான அடையாளங்களாக அவரது உடல் முழுதும் காயங்கள் இருப்பதை உறுதி செய்திருக்கின் றனர். அவரது உடலில் 6 இடங்களில் தோட்டாக்கள் பாய்ந்திருப்பதாக பிரேதப் பரிசோதனை அறிக்கை கூறு கிறது. கொலை வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்றும் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் தீபா மனு தாக்கல் செய்ய விருக்கிறார்.

•••

கிஷன்ஜி என்றழைக்கப்பட்ட தோழர் மலோஜுலா கோடேஸ்வரராவ் ஆந்திர மாநிலம், கரீம் நகர் மாவட் டத்திலுள்ள பெட்டபள்ளியைச் சேர்ந்தவர். கல்லூரிக் காலத்திலேயே முற்போக்கு மாணவர் சங்கத்தைத் துவங் குவதில் முன்னின்றதாகவும், 1975 அவசரநிலைக் காலத் தின்போதே தலைமறைவு வாழ்க்கையைத் தொடங்கிவிட் டதாகவும் ஒரு பேட்டியில் அவர் கூறியிருக்கிறார். மக்கள் யுத்தக் குழுவிலும், பின்னர் ஒன்றுபட்ட மாவோயிஸ்டு கட்சியிலும் தலைமைப் பொறுப்புகளில் இருந்து, 30 ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட தலைமறைவு வாழ்க் கையை மேற்கொண்டிருந்த மூத்த தோழராக இருந்தபோ திலும், லால்கர் போராட்டத்தை ஒட்டித்தான் ஊடகங் களின் வாயிலாக அவர் அறிமுகமானார்.

லால்கர் போராட்டத்தின் போது, பொய் வழக்குகளில் போலீசால் கைது செய்யப்பட்ட பழங்குடிப் பெண்களை விடுவிக்கக் கோரி, அக்டோபர் 2009-இல் சங்க்ரெயில் போலீசு நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்து, இன்ஸ் பெக்டர் அதீந்திரநாத் தத்தாவைப் பிணையக் கைதியாகப் பிடித்தனர் மாவோயிஸ்டுகள். 14 பழங்குடிப் பெண்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், அந்த போலீசு அதிகாரியையும் விடுவித்தனர். மார்க்சிஸ்டு அரசை இந்த நடவடிக்கை கொதிப்புறச் செய்தது. இந்நடவடிக்கையின் போது, ஒரு கட்டம் போட்ட கைத்தறித் துண்டால் தலையைப் போர்த்திக் கொண்டு, தோளில் துப்பாக்கி தொங்க, தொலைக்காட்சி காமெராவுக்கு முதுகைக் காட்டியபடி ஊடகங்களுக்குப் பேட்டியளித்தார் ஒரு தோழர். ஒடி சலான உடல்வாகும், மென்மையான குரலும் கொண்ட அவர், 'கிஷன்ஜி' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பின்னர் பிப்ரவரி 2010-இல், சில்டாவில் கிழக்குப் பிராந்திய ரைபிள்ஸ் முகாமின் மீது தாக்குதல் நடத்தி, 24 சிப்பாய்களைக் கொன்று, 47 நவீன ஆயுதங்களையும் மாவோயிஸ்டு படையினர் கொண்டு சென்ற போது, கிஷன்ஜிதான் இதற்கு காரணம் என்று போலீசு குற்றம் சாட்டியது. கிஷன்ஜிக்கு எதிரான தேடுதல் நடவடிக்கை களை மே.வங்க அரசு முடுக்கி விட்டிருந்த நிலையிலும்,



படிப்பகம்

www.padippakam.com

அவர் ஊடகங்களுக்கு பேட்டியளித்த வண்ணமிருந்தார். மார்க்சிஸ்டு அரசினால் அவரைப் பிடிக்க முடியவில்லை.

ஆனால், ''ஜங்கல் மகல் பகுதியிலிருந்து மத்திய-மாநிலக் கூட்டுப் படைகளைத் திரும்பப் பெறுவோம், எல்லா அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வோம், மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்'' என வாக்குறுதி அளித்த மம்தாவின் அரசுதான் கிஷன்ஜியைப் பிடித்துச் சித்திரவதை செய்து கொன்றிருக்கிறது. இந்தப் படுகொலைக்கு மன்மோகன், சோனியா, சிதம்பரம், மம்தா ஆகியோர்தான் பொறுப்பு என்றும் மம்தாவும் மத்திய அரசும் கூட்டாக நடத்திய சதியின் விளைவாகத்தான் இந்தப் படுகொலை நடந்திருக்கிறது என்றும் மாவோயிஸ்டு கட்சியின் மத்தியக்குழுவின் சார்பில் தோழர் அபய் குறிப்பிட்டிருக்கிறார்.



போலி மோதலில் கொல்லப்பட்ட தோழர் கிஷன்ஜியின் சடலம்.
(உள் படம்) தோழர் கிஷன்ஜி.

2004-இல் ராஜசேகர் ரெட்டியுடனான பேச்சுவார்த்தையை முறிந்தவுடனே, நல்லமலா காட்டுப் பகுதியை சுற்றி வளைத்து தோழர் ராமகிருஷ்ணாவைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. மாவோயிஸ்டுகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாக ப.சிதம்பரம் நாடகமாடிக் கொண்டிருந்த போதே, கோப்ரா படையினரால் தோழர் ஆசாத் நயவஞ்சகமாகக் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். தற்போது மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, சிவில் உரிமை அமைப்பினர் சிலரை மம்தா அரசு நியமித்து, அவர்கள் இரண்டு சுற்றுகள் பேசிவிட்ட நிலையில், கூட்டுப் படைகள் தோழர் கிஷன்ஜியைப் பிடித்துக் கொலை செய்திருக்கின்றன.

அமைதி, சமாதானம், பேச்சுவார்த்தை என்று கூறிக் கொண்டு மாவோயிஸ்டு கட்சியின் தலைமையைக் கொன்றொழிப்பது, கட்சிக்குள் உளவாளிகளை ஊடுருவச்செய்வது என்ற உத்திகளையே மத்திய-மாநில அரசுகளும் போலீசும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன. ''கிஷன்ஜி பற்றிய தகவல்களை எங்களுடைய ஆதரவாளர்களே போலீசுக்கு கசிய விட்டிருக்கின்றனர். கடைசியாக நான் கிஷன்ஜியுடன் பேசியபோது, நம்முடைய ஆதரவாளர்களுக்குள்ளேயே எதிரிகள் ஊடுருவிவிட்டனர் என்று அவர் கூறினார்'' என மாவோயிஸ்டு கட்சியின் மேற்கு வங்கச் செயலர் ஆகாஷ் தொலைபேசியில் கூறியதாக கொல்கத்தாவிலிருந்து வெளிவரும் டெலிகிராப் நாளேட்டின் (நவம்பர்,26) நிருபர் பிரணாப் மண்டல் குறிப்பிட்டிருக்கிறார்.

சிங்குர், நந்திகிராம் மக்கள் போராட்டங்களின் அரசியல் ஆதாயத்தை அறுவடை செய்து கொண்ட மம்தா பானர்ஜி, லால்கர் போராட்டத்தையும் விட்டுவைக்கவில்லை. லால்கரிலிருந்து துணை இராணுவத்தை திரும்பப் பெறவேண்டும் என்று சவடால் அடித்தார். ஆசாத்தின் கொலையைக் கண்டிப்பதாக நாடகமாடினார். ஜெயலலிதாவின் ஈழத்தாய் வேடத்தைப் போன்றதே மம்தாவின் இந்தப் 'புரட்சி' வேடம் என்பதை ஆளும் வர்க்கங்கள் புரிந்து வைத்திருந்தன. வங்கத்து அறிவுஜீவிகள் சிலருக்குத்தான் அது புரியவில்லை.

மம்தா பதவிக்கு வந்தவுடன், கூட்டுப்படை நடவடிக்கையை நிறுத்தாதது மட்டுமல்ல, மாவோயிஸ்டுகளை ஒழிப்பதற்கு சல்வாஜூடுமைப் போன்ற 10,000 பழங்குடி இளைஞர்களைக் கொண்ட சிறப்புப் போலீசு படை அமைப்பதாக அறிவித்தார். ஒருபுறம் பேச்சுவார்த்தைக்குத் தூதர்களை நியமித்து மாவோயிஸ்டுகளுடன் பேசச் சொல்லிவிட்டு, மறுபுறம் தலைவர்களைக் குறிவைத்து அழிக்கும் திட்டத்தையும் முடுக்கிவிட்டார். அதன் விளைவுதான் தோழர் கிஷன்ஜியின் படுகொலை.

தன்னுடைய வாழ்க்கையை மக்களின் விடுதலைக்கு அர்ப்பணிப்பதென்று முடிவு செய்து புறப்பட்ட தோழர் கோடேசுவர ராவ், இன்னல்மிக்க தலைமறைவு வாழ்க்கையை ஏற்று, புரட்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு கிராமங்கள், நகரங்கள், காடுகள் என 33 ஆண்டு காலம் எங்கெங்கும் சுற்றிப் பணியாற்றி, கடந்த நவம்பர் 27 அன்று தியாகி கிஷன்ஜியாக பெட்டபள்ளிக்குத் திரும்பியிருக்கிறார். 33 ஆண்டுகளுக்குப் பின் தனது மகனைப் பிணமாகப் பார்க்க நேர்ந்த அவரது தாய் மதுரம்மா நெஞ்சம் வெடித்துக் கதற, திரண்டிருந்த தோழர்கள் ''தியாகி கிஷன்ஜிக்கு செவ்வணக்கம்'' என்று முழங்க, ஆயிரக்கணக்கான மக்களும் பல்வேறு அரசியல் அமைப்புகளின் தலைவர்களும் அஞ்சலி செலுத்த தோழர் கிஷன்ஜி விடைபெறுகிறார்.

தலையில் போர்த்திய துண்டும், முதுகில் தொங்கும் துப்பாக்கியுமாக அவர் முன்னே செல்கிறார். தோழர் கிஷன்ஜியின் தியாகத்தைப் பின்தொடர்வோம்! வீரவணக்கம் தோழர் கிஷன்ஜி!

• அஜித்



படிப்பகம்

www.padippakam.com

## மாருதி சுசுகி தொழிலாளர் போராட்டம்:

# அனுபவமும் படிப்பினையும்

தமிழகத்தில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, மாருதி சுசுகி தொழிலாளர்களின் போராட்ட அனுபவத்தை தமிழகத் தொழிலாளர்களிடையே பதியவைத்து, முதலாளித்துவ பயங்கரவாதத்திற்கெதிராக அவர்களைப் போராட அறைகூவித் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கங்களை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ''மாருதி சுசுகி கார் தொழிலாளர்களிடம் பணிந்தது நிர்வாகம்! பாடம் கற்போம்! முதலாளித்துவத்துக்குச் சவக்குழி வெட்டுவோம்!'' என்ற முழக்கத்தை முன்வைத்து நவம்பர்-20 அன்று சென்னை-பூவிருந்தவல்லி, சீனிவாசா திருமண அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத்தைத் தலைமையேற்று நடத்திய பு.ஜ.தொ.மு.வின் மாநில அமைப்புச் செயலர் தோழர் சி.வெற்றிவேல் செழியன் தனது உரையில், நாட்டின் வடபகுதியிலுள்ள மானேசர் தொழிற்பேட்டை தொடங்கி தென்பகுதியில் அமைந்திருக்கும் சென்னையின் இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஒரகடம் வரையிலான அனைத்துத் தொழிற்பேட்டைகளிலும் தொழிலாளர்கள் மீதான வரைமுறையற்ற சுரண்டலும் அடக்குமுறைகளும் அன்றாட நிகழ்வுகளுள் ஒன்றாகிவிட்டதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார். ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலையில் 200 பேர் போராடினால் 800 பேர் வேலையைத் தொடரும் அவலம் இருப்பதை இடித்துரைத்த அவர், தொழிலாளி வர்க்கம் என்ற உணர்வோடு அணிதிரண்டு போர்க்குணத்தோடு எதிர்த்து நின்ற மாருதி சுசுகி தொழிலாளர்களின் போராட்டப் படிப்பினையை நாமும் பெற வேண்டும் என்பதே இக்கருத்தரங்கின் நோக்கம் எனச் சுட்டிக் காட்டினார்.

''மாருதி சுசுகி தொழிலாளர்களின் வெற்றி: அனுபவம் கற்போம்!'' என்ற தலைப்பில் உரையாற்றிய பு.ஜ.தொ.மு.வின் மாநிலப் பொருளாளர் தோழர் பா.விஜயகுமார், மாருதி சுசுகி நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், சார்லி சாப்ளினின் மாடர்ன் டைம்ஸ் திரைப்படத்தில் தொழிலாளர்கள் படும்பாட்டைச் சித்திரித்து வரும் காட்சிகளை விஞ்சும் வகையில் சுரண்டப்படுவதை விவரித்து, அதன் மூலம் மாருதி சுசுகி என்பது ஒரு ஜெண்டில்மேன் நிறுவனம் என்பதாக முதலாளித்துவப் பத்திரிக்கைகள் உருவாக்கியிருக்கும் பிம்பத்தைத் திரைகிழித்தார்.

''பல வேறுபாடுகளைக் கடந்து தொழிலாளி வர்க்கம் என்ற வகையில் அணிதிரண்டது; தொழிலாளர் நலத் துறை, போலீசு, அதிகார வர்க்கம் ஆகியவற்றின் மிரட்டல்களுக்கும் நரித்தனங்களுக்கும் பலியாகாமல் போர்க்குணத்தோடு எதிர்த்து நின்றது; சம்பள இழப்பு, வேலை நீக்கம் உள்ளிட்ட இழப்புகளைக் கண்டு துவண்டு விடாமல் மனஉறுதியுடன் போராட்டத்தைத் தொடர்ந்தது; பிர்லா, ஹிந்துஸ்தான் யுனிலீவர் உள்ளிட்ட தரகு முதலாளித்துவக் கும்பல் வலிய வந்து, தொழிலாளர்களை தாஜா செய்யும் விதமாக அறிக்கை விடுமளவிற்கு அவர்களைப் பயபீதிக்குள்ளாக்கிய மாருதி சுசுகி தொழிலாளர்களின் உறுதி'' எனத் தொழிலாளி வர்க்கம் இப்போராட்டத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல முன்னுதாரணங்களைப் பட்டியலிட்ட அவர், சரியான அரசியல் தலைமை இல்லாததனால் போராட்டத் தலைமை துரோகமிழைத்துச் சென்றதை எதிர்மறை படிப்பினையாகப் பெற வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டினார்.



''வால்ஸ்டிரீட் முற்றுகை: திணறும் முதலாளித்துவத் தலைமை பீடம்!'' என்ற தலைப்பில் உரைநிகழ்த்திய பு.ஜ.தொ.மு.வின் மாநிலப் பொதுச்செயலாளர் தோழர் சுப.தங்கராசு, வால்ஸ்டிரீட்டில் நடந்து வரும் அமெரிக்க மக்களின் போராட்டம், அமெரிக்கா ஒரு பூலோக சொர்க்கம் எனக் கூறப்படும் மாயையைத் தகர்த்திருப்பதைச் சுட்டிகாட்டினார். அமெரிக்கா மட்டுமின்றி, உலகெங்கிலுமுள்ள தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் துன்ப துயரங்களுக்குள் தள்ளிவரும் முதலாளித்துவக் கொடுங்கோன்மையை விளக்கிய அவர், இவற்றுக்கெதிராக நடைபெற்றுவரும் போராட்டங்களில் பாட்டாளி வர்க்க அரசியல் தலைமையை நிறுவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். இத்தகைய முதலாளித்துவப் பயங்கரவாதத்திற்கு எதிராக கம்யூனிசமென்ற வாளையும் கேடயத்தையும் ஏந்திக் களம்



படிப்பகம்

www.padippakam.com

காண அறைகூவல் விடுத்துத் தனது உரையை நிறைவு செய்தார்.

தொழிலாளர் நலச்சட்டங்களைத் திருத்துவதற்கு கண்டனம் தெரிவித்தும்; தொழிலாளர் நலச்சட்டங்களை மீறுகின்ற முதலாளிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியும்; சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு மற்றும் விலைவாசி உயர்விற்கு எதிர்ப்பு தெரிவித்தும்; தமிழக அரசால் பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள்நலப் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தக் கோரியும்; கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கருத்தரங்கின் நிறைவாக, பு.ஜ.தொ.மு.வின் மாநில இணைச் செயலர் தோழர் இரா.ஜெயராமன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## வால்ஸ்டிரீட் போராட்டத்தை ஆதரிப்போம்! தனியார்மயத்தை முறியடிப்போம்!!

அமெரிக்க உழைக்கும் மக்களின் வால் ஸ்டிரீட் முற்றுகைப் போராட்டம் முன்னேறி வந்த நிலையில், முதலாளித்துவப் பயங்கரத்துக்கு எதிராக அமெரிக்காவில் மட்டுமின்றி இதர ஐரோப்பிய நாடுகளிலும் பரவிவரும் உழைக்கும் மக்களின் போராட்டத்தை ஆதரித்தும், நம் நாட்டில் உழைக்கும் மக்கள் மீது திணிக்கப்பட்டுவரும் தனியார்மய - தாராளமயத் தாக்குதலை எதிர்த்துப் போராட அறைகூவியும் ஓசூரில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு. ஆலைவாயில்களிலும் வீடுவீடாகவும் விரிவாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. இதன் தொடர்ச்சியாக 10.11.2011 அன்று ஓசூர்-ராம் நகரில்தோழமை அமைப்புகளுடன் இணைந்து பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஏகாதிபத்திய கோட்டையிலேயே உழைக்கும் மக்கள் போராடத் தொடங்கிவிட்ட நிலையில், அதை ஆதரித்து ஏகாதிபத்திய உலகக் கட்டமைவை வீழ்த்த அணிதிரளவும், இந்தியாவில் கார்ப்பரேட் கொள்ளையருக்கு எதிரான போராட்டங்களைக் கட்டியமைக்க அறைகூவல் விடுத்தும் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்றினர். ஓசூரில் பிழைப்புவாதத் தொழிற்சங்கங்கள் முடங்கிக் கிடக்கும் நிலையில், செங்கொடிகள் உயர்ந்தோங்க பு.ஜ.தொ.மு. நடத்திய இந்தப் பிரச்சாரமும் ஆர்ப்பாட்டமும் தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் பெருத்த வரவேற்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

– பு.ஜ. செய்தியாளர், ஓசூர்

இக்கருத்தரங்கில் மாருதி சுசுகி தொழிலாளர்களின் போராட்டம் மற்றும் வால்ஸ்டிரீட் போராட்டக் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டதோடு, ஓவியர் முகிலனின் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு ஓவியங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டன. பு.மா.இ.மு. சென்னைக் கிளை கலைக்குழுத் தோழர்கள் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

பு.ஜ.தொ.மு. மற்றும் அதன் இணைப்புச் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமின்றி, இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் தொழிற்பேட்டைகளிலுள்ள நோக்கியா, ஹூன்டாய் மற்றும் அந்நிறுவனங்களுக்கு உதிரி பாகங்களைத் தயாரித்துத் தரும் நிறுவனங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான புதிய தொழிலாளர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மேலும், அவர்கள் இக்கருத்தரங்கம் தம்மிடம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து பு.ஜ.தொ.மு.வின் முன்னணியாளர்களிடம் நெகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டனர்.

இளம் தொழிலாளர்களால் நிரம்பி வழிந்த அரங்கமும் அத்தொழிலாளர்களிடையே ததும்பி நிறைந்த வர்க்க உணர்வும் இக்கருத்தரங்கின் வெற்றியைப் பறைசாற்றின.

● இளங்கதிர்

**தலையங்கம் தொடர்ச்சி.**

உணவுப் பொருள் கொள்முதலிலும், விற்பனையிலும் இந்த நிறுவனங்களின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்ட பின், அவர்கள் வைத்ததுதான் விலை என்ற நிலை ஏற்படும்.

அரிசியையும், கோதுமையையும், கத்திரிக்காயையும், வெண்டைக்காயையும் விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் வாங்கி, அவற்றை நியாயமான விலையில் விற்பதற்கா அமெரிக்காவின் வால் மார்டும் இன்ன பிற பன்னாட்டு சில்லறை வர்த்தகக் கழகங்களும் ரூ.500 கோடி ரூபாய் மூலதனத்துடன் இந்தியாவிற்கு வரக் காத்திருக்கிறார்கள்? எனவே, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு நுழைந்தால் விலைவாசி குறையும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும், ஒரு கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்ற மைய அரசின் நியாயவாதமெல்லாம் கடைந்தெடுத்த பொய், பித்தலாட்டம் தவிர வேறில்லை.

விருப்பமில்லாத மாநிலங்களில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கத் தேவையில்லை என்று மத்திய அரசு வழங்கும் சலுகை, ஒட்டகம் தலை நுழைப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கானதே. பா.ஜ.க., இடதுசாரிகள், ஜெயா, மாயாவதி, மம்தா உள்ளிட்ட கட்சிகள், தங்கள் மாநிலங்களில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு நுழைவதற்கு அனுமதிக்கமாட்டோமென்று முழங்குவதும் இப்போதைக்கு மக்களை ஏமாற்றுவதற்கான இரட்டை வேடம் மட்டுமே.

சில்லறை வர்த்தகத் துறையில் பன்னாட்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்படுவதென்பது, மன்மோகன் சிங் நடைமுறைப்படுத்தி வரும் இரண்டாம் கட்ட பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதி; பிற மறுகாலனியாக்க நடவடிக்கைகளைக் காட்டிலும், வேகமாகவும், ஆழமாகவும் விவசாயம்-சிறுதொழில் உள்ளிட்ட அனைத்தையும் அழிக்கவல்லது இந்த நடவடிக்கை. அடிப்படையில் தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கும் ஓட்டுப்பொறுக்கிகள் மூலம் இதனை முறியடிக்க முடியாது. இப்பிரச்சினையில் எதிர்க்கட்சிகளை நம்புவது மண் குதிரையை நம்புவதற்குச்சமமாகும் என்பதை உணர்ந்து, வணிகர்கள், விவசாயிகள் மற்றும் பிற பகுதி மக்கள் ஓரணியில் இணைந்து போராட வேண்டிய தருணம் இது. ●



படிப்பகம்

www.padippakam.com

## தி.நகர் ரங்கநாதன் தெரு:

# அங்காடிகளுக்கு “சீல்”! அதிகாரவர்க்கத்துக்கு...?

**ஏழைகளின் குடிசைகளை இடித்துத் தள்ளத் தயங்காத அதிகார வர்க்கம், சூப்பர் ஸ்டோர்களுக்காக விதிகளையே வளைத்திருக்கிறது.**

தமிழ்நாட்டில் 1970-களிலிருந்து படிப்படியாக அதிகரித்து வந்த நகரமயமாக்கம், கடந்த பத்தாண்டுகளில் அதிக வேகம் பிடித்தது. குறிப்பாக தலைநகர் சென்னைக்கு பிழைப்பு தேடி தினமும் வந்து குவியும் மக்களின் தொகையும், புதிதாக முளைக்கும் குடியிருப்புகளும், இதைச்சார்ந்து எழுப்பப்படும் உயரமான வணிக வளாகங்களும் சேர்ந்து சென்னையைத் திணறடித்து வருகின்றன.

சென்னையில் கட்டப்படும் புதிய கட்டிடங்களை ஒழுங்குபடுத்துவதற்கென சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ) ஆகிய இரண்டு அமைப்புகள் உள்ளன.

இவ்விரு அமைப்புகளும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமலும், உரிய காற்றோட்டத்துடனும், தீவிபத்திலிருந்து மக்களைக் காக்கவும் விதிமுறைகளை வகுத்துள்ளன. வணிக வளாகங்களுக்குத் தரை தளத்தில் வாகன நிறுத்தம், கடைக்கு முன் 40 அடி அகலம் வரை சாலை, போதிய இடைவெளியுடன் படிக்கட்டுகள், 2 தளங்களுக்கு மேற்பட்டிருப்பின் கட்டாயமாக தீ அணைப்பு கருவிகள், அவசர காலத்தில் வெளியேறும் வாயில்கள், இரு கட்டடங்களுக்கிடையே 5 முதல் 11 அடி வரை இடைவெளி ஆகியவை இருக்க வேண்டுமென விதிமுறைகள் உள்ளன.

ஆனால் பெரும்பாலான வணிக வளாகங்கள் இவ்விதிகளை மயிரளவும் மதிப்பதில்லை. சென்னை தியாகராய நகரிலுள்ள ரங்கநாதன் தெரு, இதற்கு தகுந்த சாட்சி. நெருக்கமாக எழுந்து நிற்கும் கட்டிடங்கள் அடைத்து நிற்கும் அத்தெருவில் தீவிபத்து ஏற்பட்டால் உயிர் தப்புதல் மிகவும் கடினம். தீயணைப்பு வண்டிகளே நுழைய முடியாத அத்தெருவிலுள்ள சரவணா ஸ்டோரில் இரண்டாண்டுக்கு முன் நடந்த தீவிபத்தில் அக்கடை ஊழியர்கள் இருவர் இறந்துள்ளனர்.

எவ்வாறு விதிமுறைகளை மதிக்காமல் கட்டப்பட்ட கும்பகோணம் பள்ளியின் தீவிபத்து 96 குழந்தைகளைக் கொன்றதோ, அதைவிட மோசமான நிலைமையில்தான் ரங்கநாதன் தெரு உள்ளது. இத்தெருவில் எழும்பியிருக்கும் கட்டுமானங்களில் நடந்துள்ள விதிமீறல்கள் தெளிவாகத் தெரிந்தபோதும், இக்கடைகளுக்கு சீல் வைப்பதாக மாநகராட்சி மிரட்டுவது, ஒப்புக்கு சில கடைகளின் சிறுபகுதிகளை இடிப்பது, வியாபாரிகள் நீதிமன்றத் தடை பெற்று பழைய நிலையே தொடர்வது என இந்த நாடகம் தொடர்ந்து கொண்டுள்ளது.

இந்நிலையில் சி.எம்.டி.ஏ.வும் மாநகராட்சியும், கடந்த அக்டோபர் 31-ஆம் நாள் ரங்கநாதன் தெருவிலும், அதையொட்டியுள்ள உஸ்மான் சாலையிலுமுள்ள 25 கடை வளாகங்களுக்கு சீல் வைத்தன. இதனை எதிர்த்து அப்பகுதிப் பெருவணிகர்கள் நீதிமன்றத்தில் முறையீடு, கடை அடைப்பு என எதிர்ப்புக் காட்டி வருகின்றனர்.

அதிகரித்து வந்த நகர்மயமாக்கத்தாலும் நிலத்தரகுக் கும்பல்களாலும் சென்னை போன்ற பெருநகரங்களில் சதுரஅடி மனையின் விலை பல ஆயிரங்களுக்கு உயர்ந்ததும் கட்டுமானங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகள் வணிகர்களால் மீறப்பட்டன. போதிய இடைவெளியோ, வாகன நிறுத்தமோ இல்லாமல் இவர்கள் கட்டிய பல அடுக்குமாடி கடைகளுக்கெல்லாம் மாநகராட்சி அதிகாரிகள் ஒப்புதல் தந்தனர்.

இவற்றுடன் நில்லாமல் அதிகார வர்க்கம் 1988-இல் நகர ஊரமைப்பு சட்டத்தின் கட்டிட விதிமுறைகளில் பல திருத்தங்களைச் செய்து, விதிமுறைகளைத் தளர்த்த முயன்றது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட பொதுநல வழக்குகள் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து இழுக்கப்பட்டு வந்துள்ளது.

தி.நகர் உஸ்மான் சாலையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் (சிஎம்டிஏ) மூடி முத்திரையிடப்பட்ட கடைகள்






படிப்பகம்

www.padippakam.com

இவ்வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, புதிய கட்டிடங்களில் விதிமுறைகள் மீறப்படுகின்றதா என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளைக் கொண்டு கண்காணிப்புக் குழு ஒன்று 2007-இல் ஏற்படுத்தப்பட்டது.

2007-இல் இருந்து இவ்வாண்டு வரை விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டிடங்கள் 6438 என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. ஆனால் கண்காணிப்புக் குழுவோ 'தாராளமாக' ஆய்வு செய்து விதிமுறைகள் மீறப்பட்டுள்ளவை 64 மட்டுமே எனக் கண்டறிந்தது. உடனே அவற்றை இடித்திடாமல், ''நோட்டீஸ் அனுப்பினோம், பதில் இல்லை'' என்று நீதிமன்றத்தில் பசப்பியது, குழுவின் அறிக்கை. விதிமீறல்களுக்குப் பக்க பலமாக இருந்த 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உட்பட 33 அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையையும் இக்குழு எடுக்கவில்லை.



'வளர்ச்சி'க்காக ஏழைகளை விரட்டியடிக்கும் அரசின் அக்கிரமம்: மெட்ரோ ரயில் திட்டத்துக்காக சைதாப்பேட்டை-அமுதா நகரில் குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்ட கொடூரம்.

அதிகாரிகள் மட்டுமல்ல; ஓட்டுக்கட்சிகளும், விதிமுறை மீறல்களுக்கு துணையாக உள்ளன. தங்கள் லாப வெறிக்கு இடைஞ்சலாக விதிமுறைகள் உள்ளன என பெருவணிகர்கள் கருதியபோது, 1999-இல் தி.மு.க.அரசும், 2002- இல் அ.தி.மு.க. அரசும் மாற்றி மாற்றி அவசர சட்டங்களைப் போட்டு அதுவரை நடந்துள்ள விதிமீறல்களுக்கு 'தப்புக்குத் தக்கபடி அபராதம்' என 'முறைப்படுத்தி' சட்டவிரோத, பொதுமக்களுக்கு ஆபத்தான கட்டிடங்களைக் காக்க முயன்றன.

1988-இல் தொடரப்பட்ட பொதுநல வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 1999-இல் தி.மு.க. அரசு கொண்டுவந்த நியாயமற்ற சட்டம் செல்லாது எனத் தீர்ப்பு கொடுத்த உச்சநீதிமன்றமோ, 1999-இல் விதிமுறைகளை மீறிய கட்டிடங்களுக்கு மட்டும் அபராதம் கட்டிக் காப்பாற்ற வழிகாட்டியது.

மாநகரங்களில் விதிமுறைகள் மீறல் என்பது பல பத்தாண்டுகளாகவே இருந்துவருவதுதான் என்றாலும், தனியார்மய-தாராளமயமாக்கலுக்குப் பிறகு அதன் தன்மை பெரிதும் மாறியுள்ளது. சில்லரை வணிகத்தில் சரவணா ஸ்டோர்ஸ் போன்ற சிலர் ஏகபோகமாக வளர்ந்தார்கள். இந்தப் புதுப்பணக்கார வர்க்கம், ஆபத்தான கட்டிடத்தால் தங்கள் ஊழியர்கள் மட்டுமல்ல, வாடிக்கையாளர்கள் கூட விபத்து ஏதேனும் ஏற்பட்டால் பாதிக்கப்படுவரே என்றெல்லாம் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு தேவை லாபம் ஒன்றுதான். தீயணைப்புக் கருவி வைக்கும் இடத்தில் கூடுதலாக ஒரு பீரோவை நிறுத்தலாமே என்றுதான் சிந்திக்கின்றனர்.

பிற துறைகளில் எவ்வாறு தனியார்மயம் ஊழலை ஊதிப் பெருக்கியதோ, அதேபோல மாநகராட்சி அதிகார வர்க்கமும் இப்புதுப்பணக்கார வர்க்கத்துடன் கைகோர்த்து ஊழலை இன்னொரு பரிமாணத்துக்கு எடுத்துச் சென்றன. தனியார்மயம் தீவிரமான பின்னரோ, நடப்பிலுள்ள சட்டங்கள், விதிமுறைகள் எல்லாம் தங்கள் லாபத்துக்கு இடையூறாக இருப்பதால், அவற்றை திருத்திடுமாறு பணக்கார வணிகர்கள் அரசைக் கோருகின்றனர். சீல்வைப்பினை அடுத்து இவ்வணிகர்கள் கூடி அரசுக்கு அதைத்தான் கோரிக்கையாக வைக்கின்றனர். இக்கடைகளை நம்பி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள் உள்ளதாக அரசை நிர்ப்பந்திக்கின்றனர், அதுவரை அதே தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்தி வந்த அண்ணாச்சிகள்.

போனால் போகிறதென்று பேருக்கு 64 கட்டடங்களை மட்டும் கண்டறிந்த அதிகாரிகள், ஒரே நாளில் அவற்றை இடித்துத் தள்ளாமல் அவர்களுக்கு 60 நாள் அவகாசமும், தீபாவளி விற்பனைக்காக கூடுதல் அவகாசமும் கொடுத்ததும் ஏன்? இதே அதிகார வர்க்கம் கூவம் நதிக்கரையிலும், பட்டினப்பாக்கத்திலும் குடிசைகளில் வாழ்ந்த மக்களிடம் இதே தாராளத்தைக் காட்டியதா?

விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்டுள்ள ரங்கநாதன் தெருவிலுள்ள கடைகளுக்கு சீல் வைத்துள்ள இந்நடவடிக்கைக்கு எதிராக வணிக சங்க தலைவர் வெள்ளையன் ''தியாகராய நகரை வியாபார மண்டலமாக அறிவிக்க வேண்டும்'' என்கிறார். ஆனால்,வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் கூவம் நதிக்கரையோர குடிசைகளை அரசு இடித்துத் தள்ளிய போது, அது குடியிருப்புப் பகுதியாக அறிவிக்கப்படவில்லை. கோடிகளில் புரளும் பெருவணிகர்களுக்கு ஒரு நீதியும் சாமானியர்களுக்கு ஒரு நீதியுமாகத்தான் அரசு அணுகுகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்காக விரட்டி அடிக்கப்படும் சாமானியர்களிடம் 'வளர்ச்சிக்காக தியாகத்தை'க் கோரும் நீதித்துறை, விதிமீறல் கட்டிடங்கள் அனைத்தையும் இடிக்கவோ, துணை நின்ற அதிகாரிகளைக் கைது செய்ய உத்தரவிடவோ முன்வரவில்லை. இக்கோரிக்கைகள் மக்கள் போராட்டமாக மாறாத வரை அதிகார வர்க்கத்தின் ஊழலும், பெருமுதலாளிகள்-பெரு வணிகர்களின் விதிமீறல்-முறைகேடுகளும், நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவு என்ற நாடகமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

## எஃப்-1 கார் பந்தயம்:

# புதுப் பணக்காரக் கும்பலின் களிவெறியாட்டம்!

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளுக்கு இணையான புதிய சூதாட்டம் இறக்குமதியாகியிருக்கிறது.**

பெர்னி எக்லீஸ்டோன் - கடந்த மாதம் வட இந்திய ஊடகங்களில் அதிகமாக அடிபட்ட பெயர் இதுதான். ‘‘பார்முலா-1’’ கார் பந்தைய நிறுவனத்தின் தலைவர் என்ற காரணத்திற்காக, இங்கிலாந்து நாட்டுத் தொழிலதிபரான எக்லீஸ்டோனை இந்திய ஊடகங்கள் தலையில் வைத்துக் கொண்டாடின. இவரைத் தாஜா செய்து இந்தியாவில் பார்முலா-1 பந்தையங்களை நடத்தியதன் மூலம், அனைத்துலக அரங்கில் இந்தியாவின் புகழ் உயர்ந்தோங்கிவிட்டதாக அவை கூறுகின்றன.

அக்டோபர் மாதம் முழுவதும், எந்தப் பத்திரிகையைப் படித்தாலும், எந்தத் தொலைக்காட்சியைத் திருப்பினாலும் பார்முலா-1தான் பிரதானமாக இருந்தது. புது தில்லிக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட பந்தய மைதானத்தில் அக்டோபர் மாதம் 30-ஆம் தேதி பார்முலா-1 பந்தயங்கள் ஒருவழியாக நடந்து முடிந்தன. இதனைக் காண இந்தியா முழுவதிலுமிருந்து பெரும் தொழிலதிபர்கள், சினிமா - கிரிக்கெட் நட்சத்திரங்கள், புதுப் பணக்கார மேட்டுக்குடியினர், அரசியல் தரகர்கள் என அனைவரும் தங்களுக்குச் சொந்தமான தனி விமானங்களில் வந்து குவிந்ததால், புது தில்லி விமான நிலையமே நெரிசலால் தடுமாறிப் போனது.

இவ்வளவு ஆடம்பரங்களோடு நடத்தப்படும் பார்முலா-1 கார் பந்தயம் என்றால் என்ன? மற்ற விளையாட்டுக்களில் இருந்து இது எவ்வாறு வேறுபட்டது? இந்த விளையாட்டிற்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்படுவதேன்?

பார்முலா-1 எனப்படும் அதிவேகக் கார் பந்தயமானது, பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும் ஒரு கேளிக்கை விளையாட்டாகும். சாதாரணமாகப் பார்க்கும் போது பார்முலா-1 என்பது மற்றுமொரு விளையாட்டு தான் எனத் தோன்றினாலும், இது மற்ற விளையாட்டுக் களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. உலகின் முன்னணி நிறுவனங்களின் விளம்பரங்கள், அனைத்து பத்திரிகை களிலும் பிரத்யேக பக்கங்கள், தொலைக்காட்சி நிறுவனங் களின் தொடர்ச்சியான நேரடி ஒளிபரப்பு - என மற்ற விளையாட்டுகளைவிட பார்முலா-1க்கு மிக அதிக அளவில் முக்கியத்துவம் கிடைத்தாலும், இது மிகப் பெரிய அளவில் நடைபெறும் ஒரு வக்கிரமான சூதாட்டம் என்பதே இதனை மற்றவற்றிலிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது.

மற்ற விளையாட்டுக்களைப் போல யார் வேண்டு மானாலும் இதனை நடத்தவும் முடியாது. சர்வதேசத் தானுந்து கழகம் என்ற அமைப்பு இந்தப் பந்தயங்களை நடத்த அனுமதி வழங்குகிறது. இந்தப் பந்தயத்தை நடத்தத் தேவையான மைதானத்தை அமைக்கவே பல நூறு கோடி ரூபாய்கள் செலவாகும். அதுமட்டுமன்றி, போட்டியை நடத்த உரிமக் கட்டணமாக 2000 கோடி ரூபாய் வரை இந்த அமைப்புக்கு வழங்க வேண்டும். போட்டியில் தனி நபர்கள் பங்கு பெறவே முடியாது. ஓட்டுநர் உரிமத்துக்கும், காருக்கான உரிமத்திற்கும் நூறு கோடிக்கும் மேல் கட்டணம் செலுத்த வேண்டும். மேலும், போட்டியில் பயன்படுத்தப்படும் காரின் விலை குறைந்தபட்சம் 300 கோடிகளிலிருந்து அதிகபட்சமாக 3 ஆயிரம் கோடி ரூபாய் வரை உள்ளது.

இவ்வளவு பணம் செலவழித்து இந்தப் போட்டியை ஏன் நடத்திட வேண்டும்? கோடிக்கணக்கில் கொடுத்து ஏன் அதில் கலந்து கொள்ள வேண்டும்? எல்லாவற்றிற்கும் காரணம் இலாபவெறி தான். உலகம் முழுக்க 60 கோடி பார்வை யாளர்களைக் கொண்ட இந்த விளை யாட்டின் பிரதான வருவாயே விளம்பரங் கள்தான். போட்டியைக் காணும் ரசிகர் களைப் பயன்படுத்தி விளம்பரங்களின் மூலம் சம்பாதிப்பதுதான் போட்டியை நடத்தும் அமைப்பிற்கும் பங்கேற்கும் நிறு வனங்களுக்கும் இலக்கு.

இந்த அமைப்பும் அதன் தலைவர் களும் ஜனநாயகத்தைவிட சர்வாதி காரத்தையே அதிகம் விரும்புகின்றனர்.

விளைநிலங்களைப் பறித்துக் கோடிகோடியாகக் கொட்டி நடத்தப்பட்ட பார்முலா -1 கார் பந்தயம்: தேசியப் பெருமிதமா? முதலாளித்துவ வக்கிரமா?





படிப்பகம்

www.padippakam.com

இந்த அமைப்பின் தலைவரான எக்லீஸ் டோன், பாசிசத்தின் பகிரங்க ஆதரவாள ராவார். இட்லரின் தீவிர விசுவாசியான இவர், பந்தயம் நடக்கும் நாடுகளில் ஜன நாயக ஆட்சியை விட சர்வாதிகாரஆட்சி இருக்க வேண்டுமென்று தனது விருப் பத்தை வெளிப்படையாக அறிவித்தவர். இதே அமைப்பைச்சேர்ந்த மேக்ஸ் மூஸ்லி என்பவரும் தன்னை இட்லரின் ஆதர வாளர் என்பதை வெளிப்படையாகக் கூறிக் கொள்பவர்.



களிவெறியாட்ட கார் பந்தய முதலாளிகளும் கருப்புப்பணப் பேர்வழிகளும்: (இடமிருந்து) பெர்னி எக்லீஸ்டோன் (பார்முலா -1 குழுமத்தின் அதிபர்), விஜய் மல்லையா (இந்திய பார்முலா-1 குழுவின் அதிபர்), கிரிக்கெட் விளையாட்டு வீரர் சச்சின் டெண்டுல்கர், இந்தித் திரைப்பட நடிகர்கள் ஷாருக்கான் மற்றும் குல்ஷன் குரோவர்.

தனியார்மய-தாராளமயத்தால் ஆதாய மடைந்துள்ள தரகுப் பெரு முதலாளிகளும் பொதுச்சொத்துக்களை விழுங்கிய புதுப் பணக்கார கருப்புப்பணப் பேர்வழிகளும் இந்தியாவில் அதிகரித்துள்ளதால், மேலை நாடுகளைப் போல இப்புதுப்பணக்கார மேட்டுக்குடி கும் பலின் வக்கிரத்துக்கேற்ற புதுப் பாணியிலான கேளிக்கை களும் சூதாட்ட களிவெறியாட்டங்களும் விளையாட்டு களும் புகுத்தப்படுகின்றன. இதனையொட்டியே இது வரை ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் மட் டுமே நடத்தப்பட்டு வந்த இந்தப் போட்டிகள் தற்போது இந்தியாவிற்குக் கொண்டுவரப்படுகின்றன.

ஏற்கெனவே இந்தியாவில் கிரிக்கெட் எனும் விளை யாட்டின் மூலம் கோடிக்கணக்கில் பணம் குவித்துவந்த முதலாளிகள், பார்முலா-1 வந்தவுடன் அதனைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டுள்ளனர். இந்தியாவில் கிரிக் கெட் போட்டிகளை நடத்தும் அமைப்புகளான பி.சி.சி.ஐயும், ஐ.பி.எல்.லும், அவற்றோடு சம்பந்தப் பட்ட முதலாளிகளும் கட்டுப்பாடின்றிக் கொள்ளைய டிப்பது எற்கெனவே தெரிந்ததுதான். இந்நிலையில், புதி தாக வந்துள்ள பார்முலா-1, இந்தியப் பெரு முதலாளி களுக்குக் கொள்ளையடிப்பதற்கான புதிய கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது.

இதனால்தான், தனது கிங் பிஷர் விமான நிறுவனத்தை நட்டக் கணக்குக் காட்டி மூடிவிடப் போவதாக அரசை மிரட்டி, அரசு வங்கிகளிடமிருந்து கறக்க முயற்சிக்கும் சாராய முதலாளி மல்லையாவும், சகாரா நிறுவனமும், தற்போதைக்கு ஐ.பி.எல். கிரிக்கெட்டை ஓரம்கட்டி வைத்துவிட்டு பார்முலா-1இன் 'டீம் இந்தியா' என்ற அணியில் முதலீடு செய்துள்ளனர். இதே காரணத்திற்கா கத்தான் ஏர்டெல் நிறுவனமும், கிரிக்கெட்டிற்கு ஒதுக்கி வைத்திருந்த நிதியை பார்முலா-1இல் முதலீடு செய் துள்ளது.

இப்பகற்கொள்ளையின் பின்னணியை அறியாமல், இந்தப் பந்தயங்களின் மூலம் இந்தியா உலக அளவில் பெயரும் புகழும் அடைந்துவிட்டதாக பார்முலா-1-இன் ரசிகர்கள் கருதுவதுதான் மிகப்பெரிய அபத்தம். இந்தப் பந்தயத்தை நடத்துவது மிகவும் பெருமிதமாகச் சித்தரிக் கப்படுகிறது என்பதால் ஜப்பான், கொரியா, சீனா, போன்ற ஆசிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியாவிலும் இந்தக் கார்ப் பந்தயம் நடந்துள்ளதால், பணக்கார நாடுகளின் வரிசையில் இந்தியாவும் சேர்ந்துவிட்டதாக அவர்கள் மார் தட்டிக் கொள்கின்றனர்.

இந்த வீண்பெருமைக்காக அவர்கள் கொடுத்த டிக் கெட் விலையும் மிக அதிகம். ரூபாய் 2,500-இல் தொடங்கி ரூபாய் 35,000 வரை டிக்கெட் விற்கப்பட்டது. அத்துடன் மைதானத்தின் பிரத்யேக இடங்களில், சொகுசு அறை களில் சீமைச் சாராயத்தைக் குடித்தபடியே பந்தயத்தை ரசிப்பதற்குத் தனி டிக்கெட். அதன்விலை இரண்டரை லட்சம் ரூபாய். இவ்வளவு பெரும் தொகையைக் கொட்டிக் கொடுத்து சுமார் 95,000 பேர் இந்தப் பந்தயத்தைக் கண்டு களித்துள்ளனர். பந்தயம் முடிந்த பின்னர் அமெரிக்க பாப் பாடகி லேடி காகாவின் இசை நிகழ்ச்சியும், களிவெறியாட்டக் கேளிக்கைக் கொண் டாட்டங்களும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட் விலையோ 10 லட்சம் வரை ஆகும்.

பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நடத்தப்பட்ட இந்த வக்கிரக்கூத்திற்கு பலநூறு விவசாயிகளின் வாழ் வாதாரமான விவசாய நிலங்களைப் பறித்துள்ளார்கள். பார் முலா-1 பந்தையம் நடத்தப்பட்ட மைதானம் அமைக்க 2000 ஏக்கர் விவசாய நிலம் விவசாயிகளிடமிருந்து அடி மாட்டு விலைக்குப் பிடுங்கப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து இன்றும் விவசாயிகள் போராடி வருகின்றனர். ஆனால் லேடிகாகாவின் ஆபாச நடனத்திற்கு தரும் முக்கியத்துவத்தில் ஒரு சதவீதத்தைக் கூட விவசாயிகளின் போராட்டத்திற்குத் தராமல், அதனை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்து வருகின்றன.

தனியார்மயக் கொள்ளையின் புதிய வடிவமாக, மேட்டுக்குடி வக்கிரத்தின் அடுத்த பரிமாணமாக, நுகர்வு வெறியுடன் பாசிசத்தையும் சேர்த்தே பரப்பும் பார்முலா-1 கார் பந்தயக் கேளிக்கைகளில் இந்திய முதலாளிகளும் மேட்டுக்குடி கும்பலும் கொட்டமடித்து வருகின்றனர். இந்திய விவசாயிகளோ வாழ்வாதாரத்தையும் இழந்து வயிறெரிய நிற்கின்றனர். இந்த வக்கிரத்தை நாட்டு மக்கள் இன்னமும் சகித்துக் கொண்டிருப்பதுதான் மிகப் பெரிய அவமானம்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

## லிபிய ஆக்கிரமிப்பு:

# மறுகாலனியாதிக்கத்தின் புதிய சோதனைச்சாலை!

**உள்நாட்டுப் போரைத் தூண்டிவிட்டு ஏழை நாடுகளை மறுகாலனியாக்கும் அமெரிக்காவின் புதிய உத்தி லிபியாவில் வெற்றியடைந்திருக்கிறது.**

லிபியாவில் நடந்துள்ள ஆட்சிக்கவிழ்ப்பானது, ஆப்பிரிக்க கண்டத்தில் ஏகாதிபத்தியவாதிகள் புதிய உத்தியுடன் தமது காலனியாதிக்க ஆக்கிரமிப்பைத் தொடர்வதை நிரூபித்துக் காட்டுகிறது. 2001-இல் ஆப்கானில் நடந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போருக்கும் 2011-இல் லிபியாவில் நடந்துள்ள ஆக்கிரமிப்புப் போருக்கும் உத்திகளிலும் வடிவங்களிலும் பெருத்த வேறுபாடு உள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களால் ஆப்கான் சூறையாடப்பட்டது. அதற்கு முன்பு, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் மற்றும் பேரழிவுக்கான ஆயுதங்களை அழிப்பது என்ற பெயரில் ஈராக் சூறையாடப்பட்டது. ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுகள் எதுவுமின்றி, ''மனித உரிமைகளைக் காப்பது'' என்ற பெயரில் ஆப்பிரிக்க கண்டத்தில் முதன்முறையாக லிபியா சூறையாடப்பட்டுள்ளது. அன்று, இராக் மீதான ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து உலகெங்கிலும், ஏன் அமெரிக்காவிலேயே கண்டனங்களும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. ஆனால், லிபியா மீதான போர்த் தாக்குதலுக்கு எதிராக அவ்வாறு பரவலாக ஆர்ப்பாட்டங்கள் தொடரவில்லை. எதிர்ப்புகளை நீர்த்துப்போக வைக்கும் உத்தியுடன் அமெரிக்கா இந்த ஆக்கிரமிப்புப் போரை நடத்தியுள்ளது.

இராக், ஆப்கான் போலின்றி, அமெரிக்க வல்லரசின் தலைமையிலான ஏகாதிபத்திய நேடோ கூட்டணி நாடுகள் லிபியாவிலேயே விசவாசக் கூலிப் படையை உருவாக்கிக் கொண்டு ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்தன. ஆளும் வர்க்க எதிர்த்தரப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அதிபர் கடாபிக்கு எதிரான அதிகாரப் போட்டியை மாபெரும் சர்வாதிகார எதிர்ப்பு - ஜனநாயகப் போராட்டமாகச் சித்தரித்தன. கடாபியின் ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு லிபியாவின் எண்ணெய் வளத்தைக் கொள்ளயிடவும் மேலாதிக்கத்தை நிலைநாட்டவும் 'கடாபியின் சர்வாதிகாரம் - மனித உரிமை மீறல்' என்று ஏகாதிபத்தியங்கள் பெருங்கூச்சல் போட்டன.

லிபியாவில் எண்ணெய்வளம் பொதுச் சொத்தாக - நாட்டுடமையாக இருந்தது. கடாபி ஒரு சர்வாதிகாரியாக இருந்தபோதிலும், ஏகாதிபத்தியங்களுடன் கள்ள உறவு கொண்டிருந்த போதிலும் இதர ஆப்பிரிக்க - மேற்காசிய நாடுகளைப் போல எண்ணெய் வளத்தைத் தனியார்மயமாக்கவில்லை. பல்வேறு மக்கள்நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்த சேமநல அரசாக கடாபியின் ஆட்சி நீடிப்பதை ஒழித்து, தனியார்மய- கார்ப்பரேட்மய ஆட்சியை நிறுவ ஏகாதிபத்தியங்கள் விழைவதுதான், லிபியாவில் 'மனித உரிமை மீறலுக்கு எதிரான போராக' சித்தரிக்கப்பட்டது.

லிபியாவில் அரச படைகளுக்கும் அதை எதிர்த்துப் போராடும் கலகப் படைகளுக்கும் இடையே நடக்கும் போர் என்பது உள்நாட்டுப் போர்தானே தவிர, அது மனித உரிமை மீறல் விவகாரமோ, மனித இனப் படுகொலையோ அல்ல என்று ஆப்பிரிக்க ஒன்றியம் ( ஏ.யூ.) அமெரிக்காவின் வாதத்தையும் போர்த்தாக்குதலையும் எதிர்த்து பலமுறை கண்டனம் தெரிவித்தது. உள்நாட்டுப் போரின் வன்முறையை இனப்படுகொலையாகச் சித்தரித்து அமெரிக்காவும் நேடோ கூட்டணிப் படைகளும் தாக்குதல் நடத்துவதென்பது, நாடுகளின் இறையாண்மைக்கு எதிரானது என்று அது குற்றம் சாட்டியது. ஆப்பிரிக்க ஒன்றியத்தை நடுவராகக் கொண்டு லிபியாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறும், சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறும் ஐ.நா.விடம் கோரியது. கடாபியும் ஆப்பிரிக்க ஒன்றியம் முன்வைத்த

'சர்வதேச சமூகத்தின்' காட்டுமிராண்டித்தனம்: அமெரிக்க - ஐரோப்பியப் படைகளின் குண்டுவீச்சுத் தாக்குதலால் அகதிகளான 6,86,000- க்கும் மேற்பட்ட லிபிய மக்கள் அண்டை நாடான துனிசியாவுக்குச் செல்லும் அவலம்.





படிப்பகம்

www.padippakam.com

திட்டத்துக்கு இசைந்தார். ஆனால், லிபியாவிலுள்ள அமெரிக்க விசுவாசக் கூலிப்படைகளும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் இதனை ஏற்க மறுத்து தாக்குதலை நடத்தின.

லிபியாவில் உள்நாட்டுப் போர் மூர்க்கமாக நடந்து வந்த நிலையில், அமெரிக்கா மற்றும் நேடோ கூட்டணியின் வான்வழி குண்டுவீச்சுத் தாக்குதலை நியாயப்படுத்த, '' நாங்கள் தாக்குதல் நடத்த இன்னும் ஒரு நாள் தாமதத்திருந்தால் பென்காசி நகரமே மயானமாக மாறியிருக்கும்; அந்த வட்டாரமே படுகொலைப் பிரதேசமாக மாறியிருக்கும்; பின்னர் உலகின் பொதுக்கருத்து எங்களுக்கு எதிராகத் திரும்பி, நாங்கள் மனித உரிமையைக் காக்கத் தவறியவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்போம்'' என்று கடந்த ஆகஸ்டு மாதத்தில் கூச்சலிட்டார், அமெரிக்க அதிபர் ஒபாமா. இராக்கில் பேரழிவுக்கான ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன என்று முன்பு அமெரிக்க அதிபராக இருந்த புஷ் கூசாமல் புளுகிக் கொண்டு ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்ததைப் போல, இப்போது லிபியா மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுக்க புஷ் வழியில் அண்டப்புளுகை ஒபாமா அவிழ்த்துவிட்டார். அவரது முதல்நிலை உதவியாளரோ, ஒரு லட்சம் அப்பாவி மக்கள் கடாபியின் அரசுப் படைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று கூசாமல் புளுகினார். முதலாளித்துவ ஊடகங்கள் இதை ஊதிப்பெருக்கி லிபியாவில் இரத்த ஆறு ஓடுவதாகப் பீதியூட்டின. ஆனால், பென்காசி நகரில் பல்லாயிரக்கணக்கானோர் அரசுப் படைகளால் படுகொலை செய்யப்பட்டதாக ஒபாமா கூறியதற்கும், ஊடகங்களால் பீதியூட்டப்பட்ட செய்திகளுக்கும் இதுவரை எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

அதேசமயம், நேடோ படைகளும், அவற்றின் விசுவாச லிபியக் கூலிப்படைகளும்தான் அப்பட்டமான மனிதத்தன்மையற்ற படுகொலைகளில் ஈடுபட்டன. நேடோ படைகளின் தாக்குதலால் ஏறத்தாழ 50,000 லிபிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 50,000-க்கும் மேற்பட்டோர் வீடு-வாசல் இழந்து அகதிகளாகி நிற்கின்றனர். பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளும், குறிப்பாக அமெரிக்க ஆதரவு நைஜீரிய அதிபரும் கூட இப்படுகொலைகளைக் கண்டித்துள்ளனர். தொடரும் வன்முறைத் தாக்குதல்களால் போரில் சிக்கிய அப்பாவி லிபிய மக்களும், அண்டை நாடுகளிலிருந்து லிபியாவில் பிழைப்புக்காக வந்த கருப்பின மக்களும் அகதிகளாகி, லிபியாவிலிருந்து ஐரோப்பாவை நோக்கி படகில் தப்பிச் சென்றபோது, அவர்களைக் காப்பாற்ற எந்த ஏகாதிபத்தியமும் முன்வரவில்லை.

ஆப்பிரிக்காவிலுள்ள கென்யா நாட்டின் கருப்பினத் தந்தைக்குப் பிறந்த மகனாகத் தன்னை அறிவித்துக் கொண்ட அமெரிக்காவின் முதல் கருப்பின அதிபரான ஒபாமா, அக்கருப்பின அகதிகளைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனித நேயம், மனித உரிமை பற்றி வாய்கிழியப் பேசும் ஏகாதிபத்திய நேடோ படைகளோ, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலோ அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நடுக்கடலில் தத்தளித்த



அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்தால் இந்தக் கதிதான் ஏற்படும் என உலகுக்கு விடப்பட்டுள்ள எச்சரிக்கை: இறைச்சிக் கூடத்தில் கிடத்தி இழிவுபடுத்தப்பட்ட லிபியாவின் அதிபர் மும்மர் கடாபியின் உடல்.

அவர்கள் உணவின்றி தண்ணீரின்றி பட்டினியாலும் நோயாலும் மாண்டுபோனார்கள்.

இனப்படுகொலையும் மனித உரிமை மீறலும் ஒரு நாட்டில் நடப்பதாகக் குற்றஞ்சாட்டி, சர்வதேச சமூகம் என்று அழைக்கப்படும் அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் இனி நேரடியாகத் தலையிட்டு ஆக்கிரமிப்புப் போரை நடத்தும் என்பதும், லிபியாவைப் போன்ற கதி இனி உலகின் பிற ஏழை நாடுகளிலும் நிகழும் என்பதும் இப்போது எழுதப்படாத விதியாகிவிட்டது.

அமெரிக்க விசுவாசக் கூலிப்படைகள் லிபியாவின் தலைநகர் திரிபோலியைக் கைப்பற்றியதும், ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள உகாண்டாவின் எல்.ஆர்.ஏ. என்ற அரசு எதிர்ப்பு அடிப்படைவாத பிற்போக்கு கலகக் கும்பலை வீழ்த்த, ''மனிதாபிமான நடவடிக்கை'' என்ற பெயரில் அமெரிக்க இராணுவப் படைகள் உகாண்டாவில் நிறுத்தப்பட்டன. இதுமட்டுமின்றி, தெற்கு சூடான், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகளிலும் அமெரிக்கப் படைகள் நிறுத்தப்பட்டு, அந்நாடுகளின் ''பாதுகாப்புக்கும் நிலைத்த தன்மைக்கும் இப்படைகள் உதவும்'' என்று அறிவித்துள்ளார், ஒபாமா. லிபியா மறுகாலனியாக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலி, சாட், நைஜர், பெனின், போஸ்ட் வானா, கேமரூன், மத்திய ஆப்பிரிக்கா, எத்தியோப்பியா, காபோன், ஜாம்பியா, செனகல், மொசாம்பிக், கானா, மாலாவி முதலான ஆப்பிரிக்க நாடுகளின் இராணுவப் படைகளுக்குப் பயிற்சி அளிக்கும் வேலையில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. ''எரிபொருள் விநியோக முறையைப் பாதுகாப்பது'' என்ற பெயரில் நைஜர் டெல்டா பகுதியிலும், கினியா வளைகுடாவிலும் அமெரிக்காவும் நேடோ கூட்டணிப் படைகளும் இராணுவப் பயிற்சிகளை நடத்தியுள்ளன. வட ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் பெருமளவு மூலதனமிட்டு செல்வாக்கு செலுத்தும் சீனாவை வெளியேற்றிவிட்டு, மூல வளங்களைக் கைப்பற்றி மேலாதிக்கம் செலுத்துவது என்ற



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்துடன் வட ஆப்பிரிக்கப் பகுதியில் அமெரிக்கா நிரந்தரமாகப் படைகளை நிறுத்த ஏற்பாடு செய்துள்ளது.

ஆசிய கண்டத்தில் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகள் அமெரிக்க மேலாதிக்கத்துக்கு விசுவாசமாக இருப்பதால், இப்பிராந்தியத்தில் பிரச்சினை இல்லை. மேற்காசியாதான் அமெரிக்காவுக்கு தொடர்ந்து சிக்கலாக இருந்து வந்தது. இதில் இராக்கும் ஆப்கானும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. மேற்காசியாவில் அடுத்ததாக சிரியாவில் லிபியாவைப் போன்றதொரு ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்ற அமெரிக்கா முயற்சிக்கிறது. அதைத் தொடர்ந்து இரான் மீது குறிவைத்துள்ளது.




ஆப்கானில் கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படையினர் 2,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் 1780 பேர் அமெரிக்கர்கள் என்றும் சி.என்.என். தொலைக்காட்சி கூறுகிறது. ஆனால், லிபியாவில் அத்தகைய இழப்புகள் எதுவுமில்லை. லிபியாவில் தனது தரைப்படைத் துருப்புகளை நிறுத்தாமல் ஆக்கிரமிப்புப் போரில் அமெரிக்கா வெற்றியைச் சாதித்துள்ளது. தமது விசுவாசக் கூலிப்படைகள் மூலமாகவும், அவற்றுக்கு ஆதரவாக வான்வழி - கடல்வழியே போர்த்தாக்குதலை நடத்தியும் லிபியாவை ஆக்கிரமித்துள்ளது, அமெரிக்கா. இது, அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கும் ஏற்புடைய புதிய உத்தியாக அமைந்துள்ளதால், இந்தப் பாணியில் ஆக்கிரமிப்புப் போரையும் மேலாதிக்கத்தையும் நிறுவ அவை துடிக்கின்றன. அமெரிக்காவின் துணை அதிபரான ஜோ பிடன், ''இப்போரில் அமெரிக்கா 200 கோடி டாலர்களைச் செலவிட்டது. ஆனால், ஒரு அமெரிக்கன்கூடக் கொல்லப்படவில்லை. கடந்த காலங்களைப் போலின்றி நாங்கள் முன்னேறிச் செல்வதைக் குறிக்கும் முக்கிய விசயம் இது'' என்கிறார். ஒரு அமெரிக்கன்கூட சாகவில்லைதான்; ஆனால், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் தாக்குதலாலும் கூலிப் படைகளாலும் 50,000-க்கும் மேற்பட்ட லிபிய மக்கள் கொல்லப்பட்டுள்ளார்களே, அவர்கள் மனிதர்கள் இல்லையா? ஏழை நாடுகளின் மனித உயிர்கள் மயிருக்குச் சமம் என்பதுதான் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் இப்போரின் மூலம் உலகுக்கு உணர்த்தியுள்ள செய்தி.

எல்லாவற்றுக்கும் மேலாக, லிபியாவின் அதிபர் கடாபியின் தலைக்கு விலை வைத்து, கடாபியைக் கொல்லுவோம் என்று பகிரங்கமாக அறிவித்தார், அமெரிக்க அரசுச் செயலரான ஹிலாரி கிளிண்டன். இப்படி ஒரு நாட்டின் அதிபரையே கொல்லுவோம் என்று அறிவிப்பது மனித உரிமைக்கு எதிரான அப்பட்டமான கிரிமினல் குற்றம். இருப்பினும், இக்காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து நாகரிக உலகின் எந்த நாடும் வாய்திறக்கவில்லை. லிபியாவின் அதிபராக இருந்த கடாபி, அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து தலைநகர் திரிபோலியிலிருந்து சிர்டே நகருக்குத் தப்பிச் சென்றபோது, அவரது வாகனம் நேடோ படைகளால் குண்டுவீசித் தாக்கப்பட்டதும், அமெரிக்க விசுவாசக் கூலிப்படையினர் அவரைச் சிறைபிடித்துச் சித்திரவதை செய்து கோரமாக கொன்றொழித்துள்ளனர். போர்க்கைதிகளைக் கொல்லக்கூடாது என்ற ஜெனிவா ஒப்பந்தத்திற்கு எதிரான அப்பட்டமான மனித உரிமை மீறல் இது.

கடாபியின் இனக்குழுவைச் சேர்ந்த தலைவர்கள், அவரது உடலை இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய ஐ.நா.மன்றத்திடமும் அனைத்துலக பொது மன்னிப்புக் கழகத்திடமும் வேண்டுகோள் விடுத்த போதிலும், அவை எதுவும் ஏற்கப்படவில்லை. கடாபியின் உடலை அரை நிர்வாணமாக்கி இழிவுபடுத்தியதோடு, இறைச்சிக் கூடத்தில் கிடத்தி கெட்டழுக வைத்து அவமானப்படுத்தி, அதைப் புகைப்படம் எடுத்து, அக்காட்டுமிராண்டித்தனத்தைப் பெருமிதமாகக் கொண்டாடின, நேடோவின் கூலிப்படைகள். அன்று காலனியாதிக்கவாதிகள் விடுதலைப் போராளிகளைப் பொது இடத்தில் தூக்கில் போட்டு பிணத்தை வல்லூறுகள் தின்ன விட்டதைப் போல, கடாபியை இழிவுபடுத்திக் கொன்றொழித்துள்ளதன் மூலம் உலகில் யாராவது இத்தகைய ஆக்கிரமிப்பை எதிர்த்தால், இந்தக் கதிதான் ஏற்படும் என்று இன்றைய ஏகாதிபத்தியவாதிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் உன்னதத்திற்கு உதாரணமாகக் காட்டப்படும் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நாகரிகமும், மனிதநேயமும், ஜனநாயகமும் உயிரினும் மேலானதாக மதிக்கப்படுவதாக ஒரு மூடநம்பிக்கை பரப்பப்படுகிறது. இது வெறும் பிரமை என்பதை லிபியாவில் நடந்துள்ள ஆட்சிக் கவிழ்ப்பு - ஆக்கிரமிப்புப் போரும் கடாபியின் படுகொலையும், அதைத் தொடர்ந்து ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சூறையாட ஏகாதிபத்தியவாதிகள் வகுத்துள்ள புதிய வடிவிலான காலனியாதிக்க ஆக்கிரமிப்புத் திட்டங்களும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. ஏகாதிபத்தியங்கள் ஏறத்தாழ 50,60 ஆண்டுகளுக்கு முன்பு பின்பற்றிய நவ காலனிய போர்த்தந்திர உத்தியை இப்போது கடாசி எறிந்துவிட்டு, புதிய வடி



படிப்பகம்

www.padippakam.com

விலான அப்பட்டமான காலனியாதிக்கத்தை -மறுகாலனியாதிக்கத்தை - செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

காட்டுமிராண்டித்தனம், சூறையாடல், இனவெறி, ஆக்கிரமிப்பு, போர்வெறி முதலான மத்தியகாலத்தின் இழிந்த பண்புகளை இன்றைய ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்கவாதிகள் போற்றிப் புகழ்கின்றனர். நாடு பிடிக்கும் போர்களை நடத்திய நெப்போலியனும் அலெக்சாண்டரும் இப்போது அவர்களின் குலதெய்வங்களாகியுள்ளனர்.

லிபியா மீது அமெரிக்கா தலைமையிலான நேடோ கூட்டணிப் படைகள் ஆக்கிரமிப்புப் போரை தொடுத்ததும், பிரான்சின் போலி சோசலிசக் கட்சியின் மூத்த தலைவரான டொமினிக் ஸ்டாரஸ்கான், ''வடக்கே ஆர்டிக்துருவத்தின் பனிப்பகுதியிலிருந்து தெற்கே சகாரா பாலைவனத்தின் மணற்பகுதிவரையிலான பிராந்தியம் இனி ஐரோப்பா கண்டமாகத் தொடர்ந்து நீடிக்கும். ஐரோப்பாவையும் ஆப்பிரிக்காவையும் பிரிக்கும் மத்தியத் தரைக்கடலை இனி ஐரோப்பாவின் உள்நாட்டுக் கடலாக மாற்ற வேண்டும். நாடு பிடிக்கும் போரில் ரோமானியர்களும் நெப்போலியனும் சாதித்ததைப் போல, ஆப்பிரிக்கக் கண்டத்தை மீண்டும் அபகரிக்க வேண்டும்'' என்று தனது காலனியாதிக்க வெறியை வெளிப்படையாகக் கக்கினார். ''ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள அல்ஜீரியாவைத் தனது காலனியாக வைத்திருந்த பிரான்ஸ், அல்ஜீரியா அன்னியக் காலனி அல்ல என்றும், அது பிரான்சின் புறக்கடைப் பிராந்தியம் என்றும் அன்று அறிவித்தது. அதைப்போன்ற நிலை இனி ஆப்பிரிக்க கண்டத்தில் உருவாகும்'' என்று அவர் பூரிப்புடன் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர், பேரழிவு ஆயுதங்களை ஒழித்தல், போக்கிரி அரசுகளைத் தண்டித்தல், ஜனநாயகம் - மனித உரிமையை நிலைநாட்டுதல், போரில் சிக்கிய சிவிலியன்களைப் பாதுகாத்தல் என்ற முகாந்திரங்களையும் நியாயவாதங்களையும் முன்நிறுத்தி ஏழை நாடுகள் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கவும், படையெடுக்கவும், அவற்றைத் தனது மறுகாலனியாக்கவும், அதற்காக முந்திக் கொண்டு தாக்கவும் தனக்குச் சிறப்பு உரிமை உண்டு என்று சொல்லிக் கொண்டு திரியும் அமெரிக்காதான் உலகின் முதல் எதிரி என்பதை லிபியா மீதான ஆக்கிரமிப்புப் போர் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது. இதுவரை காணாத காட்டுமிராண்டித்தனமும் கொடூரமும் நவீனமும் கொண்ட புதிய உத்தியுடன் போர் தொடுத்து, ஏழை நாடுகளை மறுகாலனியாக்கிவரும் அமெரிக்க மேல்நிலை வல்லரசையும் அதன் தலைமையிலான ஏகாதிபத்தியங்களையும் உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் ஓரணியில் திரண்டு போராடி வீழ்த்த வேண்டிய உடனடிக் கடமையை லிபியா மீதான ஆக்கிரமிப்புப் போர் மீண்டும் வலியுறுத்துகிறது.

● பாலன்

# "அரசு பயங்கரவாத அட்டூழியங்களுக்கு எதிராக அணிதிரள்வோம்!"

## - ம.உ.பா.மையத்தின் அறைகூவல்

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மதுரைக் கிளையின் எட்டாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, 4.11.2011 அன்று மதுரையில் ''செயலுக்கான கருத்தரங்கம்'' நடைபெற்றது.



கிளைச் செயலாளர் லயனல் அந்தோணிராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், மதுரைக்கிளை துணைச் செயலரும் உயர்நீதிமன்ற வழக்குரைஞருமான வாஞ்சிநாதன், பரமக்குடி துப்பாக்கிச் சூடு பற்றிய மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் உண்மையறியும் குழுவின் அறிக்கையை நூல் வடிவில் வெளியிட்டு, இந்நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், பரமக்குடி துப்பாக்கிச் சூட்டின் போது போலீசு தாக்கியதில் படுகாயமடைந்த ஓய்வு பெற்ற தலைமையாசிரியரான திரு.வெள்ளைச்சாமியின் நேருரை, நேரில் பார்த்த பரமக்குடி வழக்குரைஞர் திரு.பசுமலை அளித்த சாட்சியம் ஆகியன ம.உ.பா.மையத்தின் உண்மையறியும் குழுவின் அறிக்கையை மெய்ப்பிப்பதாக இருந்தது. ''பரமக்குடி துப்பாக்கிச் சூடு படுகொலைகள்: பார்ப்பனிய சாதிவெறி - அரசு பயங்கரவாத கூட்டுச் சதி'' என்ற தலைப்பில் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, துப்பாக்கிச் சூட்டில் தொடர்புடைய போலீசு அதிகாரிகளுக்குத் தண்டனை பெற்றுத் தரும்வரை ம.உ.பா.மையத்தின் போராட்டம் ஓயாது என்று சூளுரைத்தார்.

''முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் அப்சல் குரு ஆகியோரின் தூக்குதண்டனை: அரசியல் அநீதி'' என்ற தலைப்பில் உரையாற்றிய பெங்களூரு உயர்நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் பாலன், இவ்வழக்கின் சட்டப் பின்னணியை விரிவாக விளக்கியதோடு, அரசியல் சார்ந்த பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் நிரபராதிகளான இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதை உணர்த்தினார்.

இக்கருத்தரங்க நிகழ்ச்சிக்குச் சுவரொட்டி அச்சிடக்கூடாது என்று அச்சகங்களை மிரட்டிய போலீசு, விளம்பரப்படுத்தி கட்டப்பட்டிருந்த பேனரையும் கழட்டிச் சென்றது. இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நடந்த எழுச்சிகரமான இக்கருத்தரங்கில், பரமக்குடி துப்பாக்கிச் சூடு கொடூரத்தை நேரடியாகப் பதிவு செய்துள்ள வீடியோ பார்வையாளர்களுக்கு ஒளிபரப்பப்பட்டது. அரசு பயங்கரவாத அட்டூழியங்கள் பெருகிவரும் இன்றைய சூழலில், மனித உரிமை ஆர்வலர்களையும் உழைக்கும் மக்களையும் செயலுக்கு அறைகூவியழைப்பதாக இக்கருத்தரங்கம் அமைந்தது.

– பு.ஜ. செய்தியாளர், மதுரை



படிப்பகம்

### பார்ப்பன ஊடகங்கள்:

# ரத்தத்தின் ரத்தங்களை விஞ்சிய விசுவாசிகள்!

**ஜெயாவின் பாசிச வக்கிரத்திற்கு முட்டுக் கொடுப்பதே பார்ப்பன ஊடகங்களின் பத்திரிக்கை தர்மம்.**

சென்னை - கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடம் மாற்றுவது மற்றும் 13,500 மக்கள் நலப் பணியாளர்களைத் தடாலடியாக வேலை நீக்கம் செய்தது என்ற அ.தி.மு.க. அரசின் சமீபத்திய இரண்டு முடிவுகளும் ஜெயாவின் பார்ப்பன பாசிச வக்கிர புத்தியை மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளன. ''அவர் திருந்திவிட்டார்; அவரிடம் நிறைய மாற்றங்கள் தென் படுகின்றன'' எனப் பார்ப்பன பத்திரிக்கைகளும் அவரின் துதிபாடிகளும் கூறி வந்ததெல்லாம், தமிழக மக்களை ஏய்ப்பதற்காகச் செய்யப்பட்ட மோசடிப் பிரச்சாரம் என் பதையும் இவ்விரு நடவடிக்கைகளும் அம்பலப்படுத்தி விட்டன.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தைக் கைகழுவியதைப் போலவே, அதே ஆட்சியில் கட்டப்பட்ட அண்ணா நூற்றாண்டு நூலகத்தையும் கைகழுவிவிட முடியாது என ஜெயா கும்பல் உணர்ந்தே இருந்தது. அந்நூலகம் குழந்தைகள், பார்வையற்றோர் உள்ளிட்டு அனைவருக்கும் பயன்படத் தக்க வகையில் சிறந்த முறையில் நவீன வசதிகளோடு கட்டப்பட்டுள்ளது என்ற அங்கீகாரத்தை ஏற்கெனவே பொதுமக்கள் மத்தியில் பெற்றிருந்தது. அதனால்தான், இந்நூலகத்தை சென்னையில் தனது ஆட்சி அமைக்க வுள்ள ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்காவில் இன்னும் நவீன வசதிகளோடு அமைக்கப் போவதாகவும்; தற் பொழுதுள்ள கட்டிடத்தை ஆசியாவிலேயே சிறந்த குழந்தைகள் சிறப்பு மருத்துவமனையாக மாற்றப் போவதெனவும் அறிவித்தது, அ.தி.மு.க. அரசு.

சென்னை - எழும்பூரில் செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் சிறப்பு மருத்துவமனை, அங்கு பிறக்கும் சிசுக்களை நாய்கள் உள்ளே நுழைந்து தூக்கிச் சென்று விடும் அளவிற்குச் சீரழிந்து போயிருக்கிறது. போதிய மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட நவீன கருவிகள், வசதிகளின்றி அம்மருத்துவ மனை முடங்கிப்போய்க் கிடக்கிறது. ''இம்மருத்துவ மனையின் வசதிகளை மேம்படுத்துவதோடு, புதிதாகக் குழந்தைகள் சிறப்பு மருத்துவமனையை அமைக்க வேண்டும் என்றால், அதைத் தமிழகத்தின் தென்பகுதி யில் அமைத்தால்தான் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்'' என மருத்துவர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர். ஏற்கெனவே இயங்கிவரும் இம்மருத்துவ மனையைச் சீரமைப்பதைப் புறக்கணித்து வரும் அ.தி.மு.க. அரசு, புதிதாக ஒரு மிகச் சிறந்த குழந்தைகள் மருத்துவமனையை நூலகக் கட்டிடத்தில் அமைக்கப் போவதாக அறிக்கை விடுவது, கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம் என் பதைத்தான் நினைவுபடுத்துகிறது.

எனவே, ஜெயாவின் இந்த அறிவிப்பு, அவரது காழ்ப் புணர்ச்சியை, வக்கிரத்தை மறைத்துக் கொள்ளும் மூடுதிரை தவிர வேறில்லை. ஜெயா கும்பலின் கபடம் நிறைந்த இந்த நொண்டிச் சமாதானத்தைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதோடு, அந்நூலகத்தை இடம் மாற்றம் செய்வதற்கும் பலத்த எதிர்ப்பைத் தெரி வித்து வருகின்றனர். இதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில், நூலக இட மாற்றத்திற்கு இடைக்காலத் தடையுத்தரவு அளித்திருக்கிறது, சென்னை உயர் நீதி மன்றம்.

அரசு மருத்துவமனைகளின் மீது ஜெயா கொண்டுள்ள அக்கறைக்கு மேலும் பல எடுத்துக்காட்டுகளைத் தர முடியும். ஜெயா பதவியேற்றவுடனேயே, சேலத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த அரசு பல் நோக்கு சிறப்பு மருத்துவமனையை - அம் மருத்துவமனை பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ் மைய சுகாதார அமைச்சராக

நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஒரு பகுதி.





படிப்பகம்

www.padippakam.com

இருந்தபொழுது, மைய அரசின் உதவியோடு தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காகவே இழுத்து மூடினார். தற்பொழுது அம்மருத்துவமனை சீரழிந்துபோய்க் கிடப்பதாக ஜெயாவின் ஆதரவு ஏடான இந்தியா டுடே எழுதுகிறது.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு அருகில் அமைந்திருந்த மைய சிறைச்சாலை புழலுக்கு இட மாற்றம் செய்யப்பட்டவுடனேயே, அரசு பொது மருத்துவமனையை விரிவாக்குவதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்தப் போகும் திட்டத்தை தி.மு.க. அரசு அறிவித்தது. ஆட்சியைப் பிடித்த ஜெயா அத்திட்டத்தைக் கண்டு கொள்ளாததோடு, தலைமைச் செயலகத்திற்காகத் திட்டமிட்டு கட்டப்பட்ட கட்டிடத்தைச் சிறப்பு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றும் குதர்க்கமான அறிவிப்பை வெளியிட்டார்.



அண்ணா நூற்றாண்டு நூலகத்தை முடமாக்கும் அறிவிப்பை எதிர்த்து சென்னையில் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டம்.

தி.மு.க. ஆட்சியின்பொழுது பழைய தலைமைச் செயலகக் கட்டிடத்தில் இயங்கிவந்த செம்மொழித் தமிழ் நூலகத்தை, ஜெயா ஆட்சியைப் பிடித்தவுடனேயே அங்கிருந்து காலிசெய்து துரத்தியடித்துவிட்டார். அந்நூலகத்திலிருந்த நூல்களெல்லாம் தற்போதைய ஆட்சியில் கரையான் தின்னுமாறு மூட்டைகளாகக் கட்டிக் கிடப்பதாகக் கூறப்படுகிறது. தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட 12,620 அண்ணா கிராம மறுமலர்ச்சி நூலகங்களையும் அனாதைகளைப் போலக் கைகழுவிவிட்டது, ஜெயா ஆட்சி. இப்படிபட்ட ஆட்சி, அண்ணா நூற்றாண்டு நூலகத்தை வேறு இடத்தில் சீரும் சிறப்புமாக அமைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடம் மாற்றுவது, மக்கள் நலப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்தது - இவ்விரண்டு பிரச்சினையிலும் ஜெயாவின் பார்ப்பனக் கொழுப்பு, மேட்டுக்குடி திமிர், ஆணவம், பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் குரூரப் புத்தி, காழ்ப்புணர்ச்சி ஆகிய கல்யாண குணங்களைத் தவிர வேறெதையும் காண முடியாது. ஆனால், அவரை ஆதரிக்கும் பார்ப்பன ஏடுகளோ இவ்விரண்டு நடவடிக்கைகளுக்கும் வேறு நியாயங்களைக் கற்பித்து அவரைக் காப்பாற்ற முயலுகின்றன.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடமாற்றம் செய்யத் தேவையில்லை எனத் தனது தலையங்கத்தில் ஒரு புறம் முதலைக் கண்ணீர் வடிக்கும் தினமணி நாளிதழ் (நவம்பர் 4) இன்னொருபுறம், ''அண்ணா நூற்றாண்டு நூலகம் ஊழலின் மிகப்பெரிய அடையாளச் சின்னம் என்பதை முதல்வருக்கு ஏன் அவரது ஆலோசகர்கள் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை''எனப் போட்டுக் கொடுக்கும் வேலையைச் செய்கிறது. அதாவது, நூலகத்தைக் கட்டுவதில் நடந்துள்ள ஊழலை விசாரிக்க உத்தரவிட்டுவிட்டு, அதன் பின் நூலகத்தை இடமாற்றம் செய்யும் அறிவிப்பைச் செய்திருக்கலாம். இந்த ராஜதந்திரத்தைக் கடைபிடிக்க ஜெயா தவறிவிட்டார் என அலுத்துக் கொள்கிறது, தினமணி. ஆமையைத் திருப்பிப் போட்டு அடிக்க வேண்டும் எனச் சிறுவர்களுக்குச் சொல்லிவிட்டுப் போன பார்ப்பன நரித்தனம் இதுதான்.

ஜூனியர் விகடன் இதழ் (13.11.11) கழுகார் பதிலில் ஜெயாவின் வக்கிரப் புத்தியைச் சாடுவதற்குப் பதிலாக, ''அவருக்கு (ஜெயாவிற்கு) கோபம் புத்தகங்களின் மீது அல்ல. ஜெயலலிதா தனது வேதா இல்லம் வீட்டிலேயே பிரமாண்டமான நூலகத்தை முன்பு வைத்திருந்தார். எனவே, முதல்வருக்குப் புத்தகங்களின் மீது கோபம் வர வாய்ப்பு இல்லை. கருணாநிதி மீதான கோபம்தான் அண்ணா நூலகத்தின் மீது காட்டப்பட்டுள்ளது'' என ஜெயாவின் வாசிக்கும் பழக்கத்தை வியந்தோதுகிறது.

13,500 மக்கள் நலப் பணியாளர்களை ஒரே நாளில் தடாலடியாகத் துரத்தியடித்த ஜெயாவின் குரூரத்தை, சென்னை உயர் நீதிமன்றம் இவ்வேலை நீக்கத்திற்கு இடைக்காலத் தடைவிதித்து, அவர்களைப் பணியில் சேர்த்துக் கொள்ளும்படி இரண்டு முறை போட்ட உத்தரவுகளையும் ஒரு பொருட்டாக மதிக்காத ஜெயாவின் ஆணவத்தைக் கண்டிக்க முன்வராத பார்ப்பன பத்திரிக்கைகள், இப்பணியாளர்கள் அனைவரும் தி.மு.க.காரனைப் போலச் செயல்பட்டு வந்ததாகவும், பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் பழி போட்டு ஜெயாவின் தொழிலாளர் வர்க்க விரோதப் போக்கிற்கு முட்டுக் கொடுக்கின்றன.

தமிழக அரசிற்குப் புதிதாகச் சட்டசபை கட்டுவதற்குத் தனது கடந்த ஆட்சியின்பொழுதே (2001-06) திட்டம் போட்டவர்தான் ஜெயா. அதனை நிறைவேற்றிக் கொள்ள அவர் எடுத்த அடாவடித்தனமான நடவடிக்கைகளுக்கு மக்கள் மத்தியிலிருந்து எழுந்த எதிர்ப்பின் காரணமாக அவரது ஆசை நிராசையாகிப் போனது. தான் எண்ணியதை கருணாநிதி முடித்துவிட்டாரே என்ற காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் புதிய தலைமைச் செயலகக் கட்டிடத்தைக் கைகழுவினார், ஜெயா. அதுபோல, தான்



படிப்பகம்

www.padippakam.com

தலைமைச் செயலகம் கட்டத் தேர்ந்தெடுத்த இடத்தில் கருணாநிதி அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டிடத்தை அமைத்துவிட்டார் என்ற வயிற்றெரிச்சல் காரணமாகத்தான் அந்நூலகக் கட்டிடத்தையும் இழுத்து மூடிவிட முயன்று வருகிறார். ஆனால், தினமணியோ (நவம்பர்4) இவ்விசயத்தில் கருணாநிதி காழ்ப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருப்பதாக இட்டுக்கட்டி எழுதுகிறது.

> **கடந்த தி.மு.க. ஆட்சியில் காணப்பட்ட அனைத்து நிர்வாகச் சீர்கேடுகளும் அதிகார முறைகேடுகளும் அ.தி.மு.க. ஆட்சியிலும் தொடர்கின்றன. ஆனாலும், பார்ப்பன ஏடுகளும், ஜெயாவின் துதிபாடிகளும் நரகலில் நல்லரிசி தேடுவதையே தமது தர்மமாகக் கொண்டு செயல்படுகின்றன. நரகல் என்றாலும், அது ஒரு பாப்பாத்தியின் நரகல் அல்லவோ!**

மக்கள் நலப் பணியாளர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் வேலை நீக்கம் செய்யப்படுவதையும், தி.மு.க. ஆட்சியில் பணியமர்த்தப்படுவதையும் ஒப்பிட்டு, இரண்டு கழக ஆட்சிகளுமே அப்பணியாளர்களைப் பந்தாடுவதாக எழுதி, பிரச்சினையை நியாயமற்ற முறையில் முன்வைக்கிறது, ஜூனியர் விகடன் (16.11.11).

இது மட்டுமின்றி, ஜெயா ஆட்சியின் அதிகாரமுறைகேடுகளைப் பூசிமெழுகுவதையும் சிரமேற்கொண்டு செய்து வருகின்றன ஜெயா ஆதரவு ஏடுகள். சென்னையில் அண்ணா மேம்பாலத்தை ஒட்டி அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 200 கோடி ரூபாய் மதிப்பில் அமைந்துள்ள 114 கிரவுண்ட் நிலம், தற்பொழுது அ.தி.மு.க. அரசில் அமைச்சராகவுள்ள அக்ரி கிருஷ்ணமூர்த்திக்கு நெருக்கமான தமிழ்நாடு தோட்டக்கலை சங்கம் என்ற தனியார் அமைப்பின் வசம் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. கடந்த தி.மு.க. ஆட்சியில் அந்நிலத்தைத் தமிழக அரசு தன் வசம் எடுத்துக் கொண்டது. இதனை எதிர்த்து அச்சங்கம் தொடுத்த வழக்கில் சென்னை மாவட்ட ஆட்சியர் இது பற்றி முடிவு செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனிடையே ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், சென்னை மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் இருந்த மாவட்ட வருவாய் அதிகாரி, அந்நிலத்தை மீண்டும் தமிழ்நாடு தோட்டக்கலை சங்கத்திடம் ஒப்படைத்து உத்தரவிட்டார். இது முறைகேடான ஒதுக்கீடு என்பதற்கான ஆதாரங்களை முன்வைத்து தி.மு.க. சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இவ்வழக்கு தனக்கு எதிராகத் திரும்பும் என உணர்ந்த அ.தி.மு.க. அரசு, நிலத்தை மீண்டும் தன்வசம் எடுத்துக்கொண்டது. இதன் பின், தி.மு.க. தொடுத்த வழக்கை, மனுதாரரின் கோரிக்கை நிறைவேறி வருகிறது என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்தது, உயர் நீதிமன்றம்.

200 கோடி ரூபாய் பெறுமான பொது நிலத்தை அ.தி.மு.க. அரசே அபகரித்துத் தனியாரிடம் தாரைவார்த்த இந்த முறைகேட்டை எந்தவொரு பத்திரிகையும் அம்பலப்படுத்தி எழுதவில்லை என்பதோடு, ''முதல்வருக்கே தெரியாமல் இது நடந்துவிட்டது; அம்மாவின் கவனத்துக்குத் தடங்கல் இல்லாமல் ஒரு விஷயம் போய்ச் சேர்ந்தால், நிச்சயம் நடவடிக்கை இருக்கும் என்பதற்கு நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக்கொண்டது ஒரு உதாரணம்'' என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்து எழுதுகிறது, ஜூனியர் விகடன் (30.11.11).

பணி நீக்க உத்தரவை ரத்து செய்யக் கோரி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் மக்கள் நலப்பணியாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



பொதுப் பாடத்திட்டத்தை ரத்து செய்ய முயன்றது தொடங்கி பால் மற்றும் பேருந்து கட்டண உயர்வை அறிவித்திருப்பது வரை, கடந்த ஆறு மாத கால ஜெயாவின் ஆட்சியில் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் தமிழக மக்களுக்கு எதிரானதாகவே அமைந்துள்ளன. மேலும், மின் வெட்டு, மணற் கொள்ளை, நில அபகரிப்பு, நகை பறிப்பு, சீமைச் சாராயத்தின் அமோக விற்பனை என கடந்த தி.மு.க. ஆட்சியில் காணப்பட்ட அனைத்து நிர்வாகச் சீர்கேடுகளும் அதிகார முறைகேடுகளும் அ.தி.மு.க. ஆட்சியிலும் தொடர்கின்றன. ஆனாலும், பார்ப்பன ஏடுகளும், ஜெயாவின் துதிபாடிகளும் நரகலில் நல்லரிசி தேடுவதையே தமது தர்மமாகக் கொண்டு செயல்படுகின்றன. நரகல் என்றாலும், அது ஒரு பாப்பாத்தியின் நரகல் அல்லவோ!

● திப்பு



படிப்பகம்

www.padippakam.com

## அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணைய மசோதா:

# நுனி முதல் அடி வரை மோசடி

**அமெரிக்க அடிவருடித்தனம் நிறைந்த இந்திய அரசின் அணுக்கொள்கையையும் – வர்த்தகத்தையும் பாதுகாப்பதுதான் மசோதாவின் நோக்கம்.**

இந்தியாவில் ஏற்கெனவே இயங்கிவரும் மற்றும் புதிதாக நிறுவப்படும் அணு உலைகளின் பாதுகாப்புத்தன்மையைக் கண்காணிக்கவும் உறுதி செய்யவும் புதிய சட்டத்தையும், அச்சட்டத்தின் கீழ் செயல்படத்தக்க புதிய ஆணையம் ஒன்றையும் உருவாக்கும் நோக்கத்தோடு அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணைய மசோதாவைத் தயாரித்து, அதனை நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக முன்வைத்திருக்கிறது, காங்கிரசு கூட்டணி அரசு. இது நாள்வரை இந்தியாவிலுள்ள அணு உலைகளின் பாதுகாப்புத்தன்மையைக் கண்காணித்துவந்த அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தைவிட, புதிதாக உருவாக்கப்படும் ஆணையம் எந்தவொரு அமைச்சகத்துக்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாகச் செயல்படும் என்றும்; அணுஉலைகளை இயக்குவதற்கு அனுமதி வழங்கவும், கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்யவும்; அணு உலைகள் எந்த அளவிற்கு கதிர்வீச்சை வெளியிடலாம் எனத் தீர்மானிக்கவும்; அணு உலைகளை ஆய்வு செய்யவும், அணு உலைகளை இயக்கும் நிர்வாகத்திற்கு வழிகாட்டவும் உள்ளிட்டு இவ்வாணையத்திற்குப் பலவிதமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மைய அரசு தெரிவித்திருக்கிறது.

ஜப்பானின் ஃபுகுஷிமா அணு உலையில் ஏற்பட்ட விபத்து அணு உலைகளைப் பற்றிய அச்சத்தை மக்கள் மத்தியில் மிகத் தீவிரமாக ஏற்படுத்தியிருப்பதால், அவர்களின் அச்சத்தைப் போக்கும்விதமாக அணு உலைகளின் பாதுகாப்புத் தன்மையைக் கண்காணிக்க சுதந்திரமான ஆணையம் உருவாக்கப்படும் என பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் உறுதியளித்திருந்தார். அந்த உறுதிமொழியைச் செயல்படுத்தும்விதத்தில்தான் இந்தப் புதிய சட்டமும், ஆணையமும் உருவாக்கப்படுவதாக காங்கிரசு கூட்டணி அரசு தெரிவித்திருக்கிறது.

அணு மின்சாரத்திற்கு மாற்று வேறு எதுவும் கிடையாது என ஆளும் கும்பலும் அதிகார வர்க்கமும் அடித்துப் பேசி வரும் நிலையில்; அமெரிக்கா மற்றும் பிரான்சிலிருந்து அணு உலைகளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில்; ஜெய்தாபூர், கூடங்குளம், கல்பாக்கம், கைகா என நாட்டின் பல்வேறு பகுதிகளில் அணு உலைகளுக்கு எதிரான போராட்டங்கள் பரவிவரும் நிலையில், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை மசோதா மற்றும் அதன்கீழ் உருவாக்கப்படவுள்ள ஆணையத்தின் சொல்லிக் கொள்ளப்படும் சுதந்திரம், நடுநிலை, ஒளிவுமறைவற்ற தன்மை பற்றி அறிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகிவிடுகிறது.

இம்மசோதாவின்படி அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்கப்படுவதற்கு முன்பாக அணு பாதுகாப்பு கவுன்சில் என்ற அமைப்பு ஏற்படுத்தப்படும். இக்கவுன்சிலின் தலைவராக பிரதமரும், 5 அல்லது 6 மைய அமைச்சர்கள் அக்கவுன்சிலின் உறுப்பினர்களாகவும் இருப்பர். இந்த கவுன்சில் அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு தேடுதல் கமிட்டியை அமைக்கும்; அக்கமிட்டி அலசி ஆராய்ந்து ஆணையத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த நிபுணர்களை கவுன்சிலுக்குப் பரிந்துரைக்கும். அப்பரிந்துரையின்படி கவுன்சில் ஆணையத்தை நியமிக்கும். இப்படிச் சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொன்னால், அணு பாதுகாப்பு கவுன்சிலுக்கு, அதாவது பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் நெருக்கமானவர்கள், அணுசக்தி தொடர்பான மைய அரசின் விருப்பங்களுக்குத் தலையாட்டுபவர்கள் மட்டும்தான் இந்த ஆணையத்தின் தலைவராகவும் உறுப்பினர்களாகவும் வரமுடியும்.

இவ்வாணையத்தின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மட்டுமல்ல, ஆணையத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் கவுன்சிலுக்கு உண்டு. இக்கவுன்சில் தரும் வழிகாட்டுதல்களுக்கும் உத்தரவுகளுக்கும் ஆணையம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என இம்மசோதாவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது அணு உலைகளின் பாதுகாப்பைக் கண்காணித்து வரும் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் அணுசக்தி அமைச்சகத்துக்கும் அணுசக்தி கமிஷனுக்கும் கட்டுப்பட்டது என்றால், புதிதாக அமையவுள்ள ஆணையம் பிரதமரின் தலைமையில் அமைக்கப்படும் கவுன்சிலுக்குக் கட்டுப்பட்டது. இதிலெங்கே சுதந்திரமும், ஒளிவுமறைவற்ற தன்மையும் உள்ளது? இவ்வாணையம் புதிய மொந்தை பழைய கள்ளு என்பது தவிர வேறெதுவும் இல்லை என்பதை இம்மசோதாவின் பல்வேறு விதிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாணையத்தின் செயல்பாடுகள் இந்திய அரசின் சர்வதேசக் கடப்பாடுகளுக்கு ஊறு விளைவிக்காதவாறு இருக்க வேண்டும் என இம்மசோதாவின் 20-ஆவது பிரிவு குறிப்பிடுகிறது. அணு சக்தித் துறையைப் பொருத்தவரை



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் சர்வதேசக் கடப்பாடு என்பது அமெரிக்காவின் அணு ஆற்றல் மேலாதிக்கத்திற்குத் தாளம் தட்டுவது தவிர வேறெதுவும் கிடையாது. மேலும், அமெரிக்கா மற்றும் பிரான்சைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து அணு உலைகளை வாங்குவதற்குப் போடப்பட்டுள்ள இறக்குமதி வர்த்தக ஒப்பந்தங்கள், இது தொடர்பாக மைய அரசு அளிக்கும் வாக்குறுதிகளைக்கூட இந்த விதியின்படி இந்தியாவின் சர்வதேச கடப்பாடுகளாகி விடுகின்றன. இதனால் பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள சர்ச்சைக்குரிய ஆறு அணு உலைகள் மற்றும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள பழைய தொழில்நுட்பத்தில் அமைந்த 10,000 மெகாவாட் திறனுள்ள அணு உலைகளின் பாதுகாப்புத் திறன் குறித்து ஆணையம் கேள்வி கேட்க முடியாது என அம்பலப்படுத்தியிருக்கிறார், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவர் ஏ.கோபாலகிருஷ்ணன். அதாவது, இவ்விதியின்படி, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏகபோக நிறுவனங்கள் இந்தியாவிற்கு விற்கவுள்ள அணு உலைகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் ரப்பர் ஸ்டாம்பாக இந்த ஆணையம் செயல்படும் என்பதுதான்.

அணுசக்தி தொடர்பாகப் போடப்பட்டுள்ள 123 ஒப்பந்தம் உள்ளிட்ட சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் அணு உலைகளை இறக்குமதி செய்வதற்கான வியாபார ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்காமலேயே, அதன் ஒப்புதலைப் பெறாமாலேயே கள்ளத்தனமாகப் போட்டுக் கொண்டு வந்த மன்மோகன் சிங் கும்பல், ஆணைய உறுப்பினர்கள் கடிதம் எழுதுவதற்குக் கூட சுதந்திரம் வழங்கவில்லை. இம்மசோதாவின் பிரிவு 20(e)-இல் அணு உலைகளின் ஆற்றல் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த விவரங்களைக் கேட்டுப் பெறுவதற்கு இந்த ஆணையத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அந்நிய நாட்டு நிபுணர்களுக்குக் கடிதம் எழுத வேண்டுமென்றால், அதற்குக்கூட அரசின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

‘‘இந்த ஒழுங்குமுறை ஆணையம் நாட்டின் இறையாண்மைக்கு, ஒற்றுமைக்கு, பாதுகாப்புக்கு, அந்நிய நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள நட்புறவுக்கு, பொது ஒழுங்கிற்கு, நன்னடத்தைக்கு, நன்னெறிகளுக்கு எதிராகச் செயல்படக் கூடாது’’ என இம்மசோதாவின் 21-ஆவது பிரிவு வரையறுக்கிறது. அணு உலைகள் நாட்டு மக்களின் உடல் நலத்திற்கும், நாட்டின் சுற்றுப்புறச் சூழலிற்கும் கேடு விளைவிக்காதபடி இயங்குவதைக் கண்காணிக்க உருவாக்கப்படும் ஆணையத்திற்கு இத்துணை நிபந்தனைகள் விதிக்க வேண்டிய அவசியமென்ன? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போல அணு உலைகளின் பாதுகாப்புக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பாதுகாப்புக்கும் முடிச்சு போட வேண்டிய அவசியமென்ன?

அணுக்கதிர் வீச்சின் அபாயங்களை முன்னிறுத்தி அணு உலைகளை எதிர்ப்பதை நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானதாகவும் நாட்டின் இறையாண்மைக்கு விடப்படும் சவாலாகவும் ஆளும் கும்பல் முத்திரை குத்துகிறது. இந்த அடிப்படையில்தான் கூடங்குளம் அணு உலையை எதிர்த்துப் போராடி வரும் மீனவர்கள் மீது தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனவே, ஒழுங்குமுறை ஆணையம் நாட்டின் இறையாண்மைக்கு, பாதுகாப்புக்கு எதிராகச் செயல்படக் கூடாது என்ற நிபந்தனையின் பொருள் ஆணையம் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளையோ, மக்களின் உடல் நலம் சார்ந்த பிரச்சினைகளையோ காட்டி அணு உலைகள் இயங்குவதற்குத் தடை விதிக்க முடியாது என்பதுதான்.

ஆணையம் பொதுநலனுக்கு எதிராகச் செயல்படுவதாக மைய அரசு கருதினால், ஆணையத்தின் தலைவரையும் பிற உறுப்பினர்களையும் பதவி நீக்கம் செய்வதோடு, ஆணையத்தையே கலைத்துவிடுவதற்கும்; குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்கு ஆணையத்தின் பொறுப்புகளை மைய அரசு தானே எடுத்துக் கொள்ளுவதற்கும் ஏற்ப இம்மசோதாவில் விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆணையத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் தப்பித்தவறிக் கூட அரசின் அணுக் கொள்கைகளுக்கு எதிராக நடந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் இப்படிபட்ட எதேச்சதிகார விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, கலைக்கும் அதிகாரத்தை மைய அரசு தனது கையில் வைத்துக் கொண்டு, சுதந்திரமாகச் செயல்படும்படி ஆணையத்தை உருவாக்கப் போவதாகத் தம்பட்டம் அடிப்பது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனம் தவிர வேறில்லை.

அணு விபத்து காப்பீடு சட்டத்தில் திருத்தங்களைச் செய்து முடித்த கையோடு, இந்தோனேஷியாவிலுள்ள பாலி தீவிற்குச் சென்று அதிபர் ஒபாமாவைச் சந்திக்கும் பிரதமர் மன்மோகன் சிங்.



அணு உலைகள் அனைத்துமே நாட்டின் வளர்ச்சிக்காகவும் பொது நலனுக்காகவும்தான் செயல்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தப்படுவதாகவும், அவற்றை எதிர்த்துப் போராடுபவர்கள் பொது நலனுக்கு எதிரானவர்களாகவும் ஆளுங்கும்பலால் சித்தரிக்கப்படுகிறார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் பொது நலன் என்ற போர்வையில் அபாயம் நிறைந்த அணு உலைகளைத்தான் மைய அரசு பாதுகாக்கத் துடிக்கிறது என்பது விளங்கும்.



மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜெய்தாபூர் பகுதியில் பிரான்சு நாட்டிலிருந்து இறக்குமதி செய்து அமையவுள்ள அணுஉலைத் திட்டத்தை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

சிவில் அணு உலைகளைப் பெயரளவில் கண்காணிக்கும் அதிகாரம் கொண்டுள்ள இந்த ஆணையம், இராணுவ நோக்கங்களுக்காகச் செயல்பட்டு வரும் அணு உலைகள் இருக்கும் பக்கம் தலைவைத்துக் கூட படுக்க முடியாது; சிவில் அணு உலைகளின் பாதுகாப்புத்தன்மை குறித்த அம்சங்களில்கூட, அவ்வணு உலைகள் தொடர்பான அனைத்து விசயங்களையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்றும் இம்மசோதாவில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அணு மின் நிலைய வளாகத்துக்குள் நடக்கும் விபத்துக்களுள் இந்த ஆணையம் முக்கியமானவையாகக் கருதுவதை மட்டும் வெளியுலகுக்கு அறிவித்தால் போதும் என்றும் இம்மசோதா தெளிவுபடுத்தியிருக்கிறது. இது, அணு உலையில் இருந்து அவ்வப்போது வெளிப்படும் கதிர்வீச்சுக் கசிவால் ஏற்படும் சிறு சிறு விபத்துக்களையும், அதனால் அங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களும், அணு உலை இயங்கும் பகுதியில் வசிக்கும் மக்களும் பாதிக்கப்படுவதையும் குழிதோண்டிப் புதைக்கும் சதி தவிர வேறெதுவும் கிடையாது.

'சுதந்திரமாக'ச் செயல்படவிருக்கும் இந்த ஆணையம், அரசாங்கம் அமைக்கும் விசாரணை கமிசன்களைப் போல, அரசின் ஊதுகுழலாகத்தான் செயல்படும். கூடங்குளம் அணு மின்நிலைய பிரச்சினையையொட்டி அமைக்கப்பட்டுள்ள முத்துநாயகம் கமிட்டியின் செயல்பாடுகளுக்கும் இந்த ஆணையத்தின் செயல்பாடுகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடு எதுவும் இருக்கப் போவது கிடையாது என இப்பொழுதே நாம் அடித்துச் சொல்லிவிடலாம்.

இதுவொருபுறமிருக்க, நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள அணு விபத்து காப்பீடு சட்டத்தில், ''அணு உலையின் வடிவமைப்பில் தவறு இருந்து, அதனால் விபத்து நேரும் பட்சத்தில் அந்த உலையை விற்பனை செய்த நிறுவனத்திடமிருந்து அந்த அணு உலையை இயக்கும் நிறுவனம் குறைந்தபட்ச இழப்பீடு கேட்பதற்கு'' ஏற்ப விதிகள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த விதிகளை அச்சட்டத்தில் மன்மோகன்சிங்தானே முன்வந்து சேர்க்கவில்லை. போபால் படுகொலை தீர்ப்பு மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த கோபமும், வெறுப்பும் இப்படிபட்ட விதியை அச்சட்டத்தில் சேர்க்க வேண்டிய கட்டாயத்தை மன்மோகன் சிங்கிற்கு ஏற்படுத்தியது.

இந்த விதியை அச்சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என அமெரிக்கா கொடுத்த நெருக்குதலையடுத்து, இந்த விதியை நீர்த்துப் போகச் செய்துவிடும் திருத்தங்களை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகத் தற்பொழுது முன்வைத்துள்ளது, மன்மோகன் சிங் கும்பல். மன்மோகன் சிங் இந்தத் திருத்தத்தை அறிவித்துவிட்டுதான், ஒபாமாவைச் சந்திக்க கடந்த மாதம் விமானம் ஏறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அணு விபத்துக்களால் பாதிக்கப்படும் மக்கள் அணு உலைகளைத் தயாரித்து விற்ற நிறுவனத்திடமிருந்து நேரடியாக நட்ட ஈடு கோருவதற்கு வழிவகை செய்யும் பிரிவையும் இந்தச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டுமென்றும் அமெரிக்கா நிர்பந்தித்து வருகிறது. மன்மோகன் ஒபாமாவைச் சந்தித்தபொழுது, அமெரிக்கா கோருவதையெல்லாம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என அவரிடம் வாக்குறுதி அளித்துவிட்டுத் திரும்பியதோடு, இந்த மாதத்திற்குள் அணு விபத்து காப்பீடு சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிடுவேன் எனச் சபதமும் போட்டுள்ளார்.

அணு உலைகளின் பாதுகாப்புத் தன்மை குறித்த தகவல்களையும் உண்மைகளையும் மூடிமறைக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள மசோதாவை அணு பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணைய மசோதா என அழைக்கிறார்கள். அணு விபத்து காப்பீடு சட்டத்தில் இந்தியாவிற்கு அணு உலைகளை விற்கும் ஏகபோக நிறுவனங்களிடமிருந்து விபத்துக்கான நட்ட ஈடு பெறுவதைத் தடுக்கும் சட்டத்திற்கு அணு விபத்து காப்பீடு சட்டம் எனப் பெயரிடுகிறார்கள். இது, அருவெறுக்கத்தக்க பித்தலாட்டத்தனமும் கிரிமினல்தனமும் கொண்டதுதான் மன்மோகன் சிங் கும்பல் என எடுத்துக் காட்டுகிறது.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

### மூளைக் காய்ச்சலுக்குப் பலியாகும் குழந்தைகள்:

# பட்டினி போட்டது அரசு
# கொன்று போட்டது தொற்றுநோய்

**ஆளுங்கும்பலின் அலட்சியத்தால் மூளைக் காய்ச்சல் சாவுகள்
உ.பி.யில் வருடாந்திர நிகழ்ச்சிநிரலாகிவிட்டது.**

இந்தியாவின் புதுப் பணக்கார கும்பல் உ.பி.யின் நொய்டாவில் நடந்த எஃப் - 1 கார் பந்தயப் போட்டியை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், முதலாளித்துவப் பத்திரிக்கைகள் அப்பந்தயத்தை இந்தியாவின் பொருளாதார வல்லமையின் அறிகுறியாகப் பறைசாற்றிக் கொண்டிருந்த அதே நேரத்தில், கிழக்கு உ.பி. பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளும் சிறுவர்களும் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். இந்த மழைக்காலம் முடிவதற்குள் கிழக்கு உ.பி. பகுதியில் வாழ்ந்துவரும் ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குழந்தையும் இந்த வாழ்வா, சாவா போராட்டத்தைச் சந்தித்துத்தான் தீர வேண்டும்.





உ.பி. (மேல்படம்) மற்றும் பீகார் மாநிலங்களில் பரவி வரும் மூளைக் காய்ச்சல் நோயால் தாக்குண்டு, சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள்.

இந்தத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு, கிழக்கு உ.பி.யில் கோராக்பூர் நகரில் அமைந்துள்ள பாபா ராகவ் தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுள் பெரும்பாலானவை, நோயின் தீவிரத்தால் அடையாளம் தெரியாத அளவிற்கு உடல் மெலிந்து உருக்குலைந்து போய் மரணத்தின் வாயிலில் உள்ளன. பல குழந்தைகள் செயற்கை சுவாசம் பொருத்தப்பட்ட நிலையில், 15 நாட்களுக்கும் மேலாக நினைவு திரும்பாத நிலையில் மரணத்துடன் போராடி வருகின்றன. ''இந்த மருத்துவமனைக்குள் நுழைவது ஏதோ பிணவறைக்குள் நுழைவது போல இருக்கிறது; நோயின் தீவிரத்தாலும், மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லாததாலும், பெற்றோர்கள் தம் கண் முன்னே தங்களது குழந்தைகள் சிறுகச்சிறுக சாவாதைப் பார்த்துக் கதறியபடியே உள்ளனர்'' என இந்த அவலத்தை அம்பலப் படுத்தியிருக்கிறது, ஃபிரண்ட்லைன் இதழ்.

உயிரைக் கொல்லும் அபாயம் நிறைந்த இந்த மூளைக் காய்ச்சல் தொற்றுநோய் ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்தின்பொழுது கிழக்கு உ.பி. பகுதியைத் தாக்கிக் கோரத் தாண்டவமாடும். அங்கிருந்து பீகார், அசாம், நேபாளம் எனப் பரவத் தொடங்கும். இந்தியா வல்லரசாகிக் கொண்டிருக்கிறது என்ற கூச்சல் நமது காதுகளைக் கிழித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில்தான், உ.பி. மாநிலத்தில் இந்தத் தொற்று நோய்க்கு 2007-இல் 645 குழந்தைகளும், 2008-இல் 537 குழந்தைகளும், 2009-இல் 556 குழந்தைகளும், இந்த ஆண்டில் கடந்த அக்டோபர் மாதத்திற்குள் 465 குழந்தைகளும் பலியாகின. பீகாரின் ஆறு மாவட்டங்களில் பரவியுள்ள இந்த நோய் காரணமாக இந்த ஆண்டு அக்டோபருக்குள் ஏறத்தாழ 200 குழந்தைகள் இறந்து போயுள்ளனர். மருத்துவமனையில் சேர்க்க வழியில்லாமல் நோய் தாக்கி வீட்டிலேயே இறந்து போய்விட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இப்புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படவில்லை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இந்த நோய் தாக்கி உயிர் பிழைத்த குழந்தைகளை விட, இந்த நோய் தாக்கி இறந்த குழந்தைகளை ஒருவிதத்தில் அதிருஷ்டசாலிகள் என்றே கூறலாம். குரல் பறிபோதல், மூளை வளர்ச்சிக் குன்றிப் போதல், பிறர் பேசுவதைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை இழத்தல், கை



படிப்பகம்

www.padippakam.com

கால்களை அசைக்க முடியாத அளவிற்கு மூட்டுகள் இறுக்கம் அடைதல், கண் பார்வை பறிபோதல் உள்ளிட்டுப் பல்வேறுவிதமான நரம்பு மற்றும் மூளை தொடர்பான பாதிப்புகளை இத்தொற்றுநோய் உயிர் பிழைக்கும் குழந்தைகளிடம் ஏற்படுத்தும் என்கிறார்கள் மருத்துவர்கள். இத்தொற்றுநோய் தாக்கிய நிலையில் கிடைக்கும் அற்பமான மருத்துவ வசதிகூட, இத்தொற்றுநோயால் ஏற்படும் பிந்தைய பாதிப்புகளுக்குக் கிடைப்பதில்லை. இப்படிப் பாதிக்கப்படும் குழந்தைகள் பெற்றோர்களுக்குப் பெரும் சுமையாக மாறி விடுகிறார்கள்.



கிழக்கு உ.பி.யின் கிராமப்புறங்களில் கையடி பம்புகளிலிருந்து கிடைக்கும் மாசுபட்ட நீர்தான் ஏழைகளின் குடிநீருக்கான ஒரே ஆதாரம்.

1978-ஆம் ஆண்டு தொடங்கி கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மூளைக் காய்ச்சல் நோய் உ.பி. மாநிலத்தைத் தாக்கி, ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான குழந்தைகளைப் பலி கொண்டு வருகிறது. மூளைக் காய்ச்சல் உயிரைப் பறித்துவிடும் அபாயகரமான தொற்றுநோய் என்றபோதும், இதுவொன்றும் ஒழித்துக்கட்ட முடியாத, மருத்துவ உலகத்திற்கே சவால்விட்டு வரும் நோய் கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் இந்நோய் தாக்கும் பகுதியைச் சேர்ந்த 15 வயதுக்கும் கீழான சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் முறையாகத் தடுப்பூசிப் போடுவது; அப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதாரம் நிறைந்த கழிப்பிட வசதிகள், அங்கன்வாடிகள் மூலம் குழந்தைகளுக்குச் சத்தான உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது, மிகவும் முக்கியமாக இந்நோயைப் பரப்பும் கொசுக்களை ஒழிப்பது என்பது போன்ற சாதாரண நடவடிக்கைகள் மூலமே இந்நோயை முற்றிலுமாக ஒழித்துக் கட்டிவிட முடியும்.

எனினும், கடந்த முப்பது ஆண்டுகளில் மைய அரசும் சரி, மாநில அரசும் சரி கொசு மருந்து அடிப்பதற்குக்கூடப் போதிய நிதியை ஒதுக்கியதில்லை என்பதுதான் கசப்பான உண்மை. கிழக்கு உ.பி. பகுதியில் உள்ள கிராமப்புற மக்களுக்குத் திறந்தவெளிதான் கழிப்பிடங்கள்; அக்கிராமப்புறங்களில் கணக்குக் காட்டுவதற்காக, ஏனோதானோவென்று போடப்பட்டுள்ள கையடி பம்ப் வழியாகக் கிடைக்கும் மாசுபட்ட தண்ணீரைத்தான், அப்பகுதி மக்கள் குடிப்பதற்கும் குண்டி கழுவுவதற்கும் ஒருசேரப் பயன்படுத்தி வருகின்றனர்.

கிழக்கு உ.பி. பகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ 10 இலட்சம் முதல் 20 இலட்சம் பேர் வரை வாழ்ந்து வருகின்றனர். எனினும், இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அளவிற்கு ஓரளவு மருத்துவ வசதிகள் கொண்ட ஒரே அரசு மருத்துவமனை கோராக்பூரில்தான் உள்ளது. கிழக்கு உ.பி. பகுதியிலிருந்து மட்டுமல்ல, மிகத் தொலைவிலுள்ள பீகாரின் கிராமப்புறங்களிலிருந்தும் நோய்வாய்ப்பட்ட குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு இம்மருத்துவமனைக்கு பெற்றோர்கள் ஓடிவருவதை இன்றும் காண முடியும். இந்தத் தொற்றுநோய் பெரும்பாலும் மிகவும் வறிய விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைப் பாதிப்பதால், தனியார் மருத்துவமனைகள் இந்த நோய்க்குச் சிகிச்சை அளிப்பது பற்றி அக்கறை செலுத்துவதுதில்லை.

கோராக்பூரிலுள்ள பாபா ராகவ் தாஸ் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இத்தொற்றுநோய்க்கான சிறப்பு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகின்றபோதிலும், இந்நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்றவாறு போதிய எண்ணிக்கையில் சிறப்பு மருத்துவர்களோ, பிற சுகாதார ஊழியர்களோ இம்மருத்துவமனையில் பணியமர்த்தப்படவில்லை; அங்கு கிடைக்கும் மருத்துவ வசதிகளும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. இத்தொற்றுநோய் தாக்கிய குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு குறைந்தபட்சம் 50 செயற்கை சுவாசக் கருவிகள் தேவைப்படும் நிலையில், அம்மருத்துவமனையில் 20 சுவாசக் கருவிகள்தான் செயல்படும் நிலையில் உள்ளன. போதிய படுக்கை வசதிகள் இல்லாததால், ஒரே படுக்கையை இரண்டு, மூன்று குழந்தைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பீகார் மாநிலத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் போதிய அளவிற்குக் கழிப்பிட வசதிகளே கிடையாது எனும்பொழுது, அங்கு கிடைக்கும் மருத்துவ வசதிகளைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இத்தொற்றுநோய் தாக்கி அம்மாநிலத்தில் தற்பொழுது இறந்து போயுள்ள 200 குழந்தைகளுள் 12 குழந்தைகள் போதிய செயற்கை சுவாசக் கருவிகள் இல்லாததனால் மரணமடைந்திருக்கின்றன.

''இந்தத் தொற்றுநோயை ஒழித்துக் கட்டுவதற்குத் தேசிய அளவில் ஒரு செயல்திட்டத்தையும், அதற்கான நிதியையும் ஒதுக்க வேண்டும்'' என அரசு மருத்துவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

கோரி வரும் வேளையில், மத்திய, மாநில அரசுகளோ இந்நோய்க்கான தடுப்பூசி மருந்தைக்கூட முறையாகவும் தொடர்ச்சியாகவும் போதிய அளவிலும் வழங்குவதில்லை. இந்நிலையில், இந்தத் தொற்றுநோய்க்கான தடுப்பூசி மருந்தைத் தயாரித்துவரும் பொதுத்துறை மருந்து நிறுவனம் தற்பொழுது தயாரிப்புச் செலவு கூடுவதைக் காட்டி இத்தடுப்பூசி மருந்தைத் தயாரிப்பதையே நிறுத்திக் கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு ஏற்ப அதிகார வர்க்கமும் கடந்த பல ஆண்டுகளாகவே இத்தொற்றுநோய் பரவுவதையே ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது. குறிப்பாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்தியிலுள்ள காங்கிரசு கூட்டணி அரசும், உ.பி.யை ஆண்டு வரும் மாயாவதி அரசும் ஒருவர் மீது ஒருவர் பழி போடும் அரசியல் லாவணி கச்சேரியை நடத்துவதற்கு இத்தொற்றுநோய் தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்ட அளவிற்கு, இந்த நோயை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் அக்கறை காட்டியதில்லை. இதனால் வெறுத்துப் போன கிழக்கு உ.பி. பகுதியைச் சேர்ந்த 500 பேர் இந்தத் தொற்றுநோயை ஒழிக்கும் நடவடிக்கைகளை எடுக்கக் கோரி, பேனா மை-க்குப் பதிலாக தமது இரத்தத்தால் கடிதம் எழுதி மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பியிருக்கின்றனர்.

இந்தத் தொற்றுநோய் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக் கணக்கான குழந்தைகளைத் தாக்கிப் பலி கொள்ளுவதற்கு மருத்துவ, சுகாதார வசதிகள் இல்லாதிருப்பது மட்டுமின்றி, அக்குழந்தைகள் சத்தான உணவு கிடைக்காமல் நோஞ்சன்களாக வளருவதும் முக்கிய காரணமாகும் என மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ''இக்குழந்தைகளுக்கு புரோட்டீன் சத்து நிறைந்த பருப்பு சூப்பு மற்றும் பால் போன்ற உணவுகளைக் கொடுக்க வேண்டும்; ஆனால், இவர்களின் வாழ்க்கை நிலைமையோ வெறும் சுடுகஞ்சி கொடுக்கக்கூடிய நிலையில்தான் உள்ளது'' என இந்த அவலத்தை எடுத்துக் கூறுகிறார், பாபா ராகவ் தாஸ் மருத்துவமனையின் தலைமை உணவு நிபுணர் நேஹா சிங். ''எங்களின் வாழ்க்கையே அரைகுறை பட்டினி என்றிருக்கும்போது, எனது மகனுக்கு எப்படி சத்தான உணவைக் கொடுக்க முடியும்?'' எனக் கேட்கிறார், சோனி சௌராஸியா என்ற தாய்.

சோனி சௌராஸியாவின் குடும்பம் மட்டுமல்ல, கிழக்கு உ.பி.யின் கிராமப்புறங்களில் வாழும் பெரும்பாலான விவசாயக் கூலிகளின், உதிரித் தொழிலாளிகளின் நிலைமை இதுதான். இந்த உண்மை தெரிந்திருந்தும், அந்த ஏழைக் குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்ப அட்டைகளை வழங்க மறுத்து வருகிறது, உ.பி. மாநில அரசு. மத்தியில் ஆளும் காங்கிரசு கூட்டணி அரசோ, ரேஷன் அட்டைகள் முழுவதையும் ஒழித்துக்கட்டிவிட நல்ல நாள் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதற்காகவே, கிராமப்புறங்களில் நாளொன்றுக்கு 26 ரூபாய்க்கு மேல் கூலி பெறுபவர்களை ஏழைகளாகக் கருத முடியாது என வாதாடி வருகிறது.

உண்மை இவ்வாறிருக்க, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உ.பி. மாநில சட்டமன்றத் தேர்தலையொட்டி அம்மாநிலத்தில் பிரச்சாரம் செய்து வரும் ராகுல் காந்தியோ, மாயாவதியின் பிடியிலிருந்து ஏழை மக்களைக் காக்க வந்திருக்கும் ரட்சகனைப் போலத் தன்னைக் காட்டிக் கொள்கிறார். ஏழைகளின் குடிசைகளுக்குத் திக்விஜயம் செய்வது, அவர்களின் வீடுகளில் உணவருந்துவது என்ற மோசடி நாடகத்தை மீண்டும் நடத்திக் கொண்டிருக்கிறார்.

● ரஹீம்

# தோழர் ஏ.எஸ்.முத்துவுக்குச் சிவப்பஞ்சலி!

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகிலுள்ள விக்கிரமசிங்கபுரத்தைச் சேர்ந்த பு.ஜ.தொ.மு.வின் மூத்த தோழரும், மதுரா கோட்ஸ் ஆலையின் முன்னாள் தொழிலாளியும், புதிய ஜனநாயகம் இதழின் நீண்டகால முகவருமான தோழர் ஏ.எஸ். முத்து, திடீர் உடல்நலக் குறைவால் கடந்த நவம்பர் 15-ஆம் தேதியன்று மரணமடைந்துவிட்டார்.



தோழர் ஏ.எஸ்.முத்துவின் தந்தையாரான திரு. ஆண்டி அவர்கள், சி.பி.எம். கட்சியின் முன்னணி ஊழியராகச் செயல்பட்டவர். தந்தையின் வழியில் தோழர் முத்துவும் சி.பி.எம். கட்சியில் ஊக்கமாகச் செயல்பட்டு வந்தார். பின்னர் 1985-இல் நக்சல்பாரி புரட்சிகர அரசியலால் ஈர்க்கப்பட்டு சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறிய அவர், புரட்சிகர இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு உற்சாகமாகச் செயல்பட்டார். அவரது தந்தையார் சி.பி.எம். கட்சிக்காக ஓட்டுக் கேட்டு பிரச்சாரம் செய்தபோது, தோழர் முத்து தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை வீச்சாக நடத்தினார். இதனால் முரண்பாடு முற்றி, அவரது தந்தையார் அவரை வீட்டைவிட்டு வெளியேற்றிய போதிலும், பல்வேறு இழப்புகளும் இடர்ப்பாடுகளும் ஏற்பட்ட போதிலும், இரத்தப் பாசத்தை விட மார்க்சிய-லெனினிய புரட்சிகர இலட்சியத்தின் மீதான பற்றும் பாசமும்தான் உயர்வானது என்று தனது இறுதிக்காலம்வரை புரட்சிகர இயக்கத்தில் உணர்வோடும் பற்றுறுதியோடும் அவர் செயல்பட்டார்.

கடந்த 25 ஆண்டுகளாக புதிய ஜனநாயகம் இதழின் முன்னுதாரணமிக்க முகவராகச் செயல்பட்ட தோழரது மரணம் புதிய ஜனநாயகம் இதழுக்கும் புரட்சிகர அமைப்புகளுக்கும் பேரிழப்பாகும்.

தோழர் முத்துவின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்! அவரது இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற உறுதியேற்போம்!

- பு.ஜ. ஆசிரியர் குழு

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி





கணேசன், இந்தியாவில் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான ஒரு விடுதலைப் போரை நக்சல்பாரி புரட்சியாளர்கள் தலைமையில் சாதிக்க அறைகூவினார். மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் குடும்பம் குடும்பமாகப் பங்கேற்ற, அரங்கம் நிரம்பி வழிந்த இந்த விழாவில், பு.மா.இ.மு. சார்பில் ''சோவியத் திரைப் படத் தொகுப்பு வரிசை-1'' என்ற டிவிடி வெளியிடப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்ட புரட்சிகர அமைப்புகள் இணைந்து, நவம்பர் சோசலிசப் புரட்சிப் பாதையில் நம் நாட்டிலும் ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் வீழ்த்த அறைகூவி பாகலூர் - சூடாபுரம் பகுதியில் விழாவை நடத்தின. காலை முதல் பிற்பகல் வரை நடந்த சிறுவர், மகளிர், ஆடவருக்கான விளையாட்டுப் போட்டிகளில், குறிப்பாக, மன்மோகன் சிங் உருவப் படத்துடன் கூடிய உரியை அடிக்கும் போட்டி பெருத்த வரவேற்பைப் பெற்றது. பின்னர், தோழர்களும் உழைக்கும் மக்களும் ஊர்வலமாகத் திரண்டு முழக்கமிட்டபடியே பாகலூர் சர்க்கிளில் கூடி பட்டாசுகள் வெடித்து செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கினர். அதைத் தொடர்ந்து நடந்த அரங்கக் கூட்டத்தில் பாட்டுப் போட்டி, கவிதைப் போட்டியும், மாணவர்களின் சிற்றுரையும், அதைத் தொடர்ந்து முன்னணியாளர்களின் சிறப்புரையும் வர்க்க உணர்வைப் பறைசாற்றுவதாக அமைந்தன.

கிருஷ்ணகிரி மாவட்டம் நாட்ராம் பாளையத்தில், நவம்பர் புரட்சி நாள் விழாவுடன் புதிய ஜனநாயகக் கட்டிடத் தொழிலாளர் சங்கத் தொடக்கவிழாவும் நடைபெற்றது. மேளதாளத்துடன், பட்டாசுகள் வெடித்து அத்திமரத்தூரிலிருந்து புறப்பட்டு நாட்ராம் பாளையம் பேருந்து நிலையம் வரை விவசாயத் தொழிலாளர்களும் கட்டிடத் தொழிலாளர்களும் செங்கொடி ஏந்தி அணிவகுத்து வந்த பேரணியின் முடிவில், கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டன. பின்னர், மாலை நடைபெற்ற அரங்கக் கூட்டத்தில் முன்னணியாளர்கள் எழுச்சியுரையாற்றினர்.

தஞ்சையில் மானோஜிப்பட்டி, கீழவாசல், பாத்திமா நகர், அண்ணா நகர், இரயிலடி ஆகிய இடங்களில் செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி தோழர்கள் சூளுரையேற்றனர். மாலையில் நடைபெற்ற அரங்கக் கூட்டத்தில் ''உலக முதலாளித்துவ நெருக்கடி'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், கேடுகெட்ட ஏகாதிபத்திய அமைப்பு முறையைத் தூக்கியெறிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்த்தினார். சிறுவர்களின் கலைநிகழ்ச்சி, கவிதை வாசித்தல், நாடகம் ஆகியவற்றோடு மூத்த தோழரும் லாவணி இசைக் கலைஞருமான தோழர் காதர் பாடிய பொதுவுடமை இயக்கப் பாடல்கள் நிகழ்ச்சிக்கு எழுச்சியூட்டின.

விருத்தாசலத்தில், நவம்பர் புரட்சிநாள் விழாவும் பெண்கள் விடுதலை முன்னணியின் தொடக்க விழாவும் இணைந்து நடைபெற்றன. கல்வி உரிமைக்கான மாணவர்களின் பெற்றோர் சங்கத்தின் முன்னணியாளர்களும், பு.மா.இ.மு தோழர்களும் உரையாற்றியதைத் தொடர்ந்து, ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு சிறப்புரையாற்றினார். மாறுவேடப் போட்டியில் பெரியார், வேலு நாச்சியார் வேடமணிந்து வந்த சிறுவர்களும் மாணவர்களும் மக்களைப் போராட அறைகூவினர்.

இவை தவிர, திருவாரூர் அம்மையப்பன் - டாக்டர் அம்பேத்கர் நகரிலும், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் வட்ட வி.வி.மு. கிளைகளிலும், தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வி.வி.மு. கிளைகளிலும், நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நீலகிரி மாவட்டம் கோத்தகிரியிலும், சேலம் - திருவள்ளுவர் நகரிலும் விண்ணதிரும் முழக்கங்களுடன் செங்கொடியேற்றி இனிப்புகள் வழங்கி சூளுரை ஏற்பும், அதைத் தொடர்ந்து நடந்த அரங்கக் கூட்டங்களில் முன்னணியாளர்களின் சிறப்புரையும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கடலூரில் பு.மா.இ.மு சார்பில் டவுன்ஹாலில் கட்டுமானத் தொழிலாளர்களும் பெண்களும் குழந்தைகளும் திரளாகப் பங்கேற்ற அரங்கக் கூட்டத்தில் முன்னணியாளர்களின் சிறப்புரையும் பெண் தோழர்களின் கலை நிகழ்ச்சியும் புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க சூளுரை ஏற்பதாக அமைந்தன.



போலி கம்யூனிஸ்டுகள் சடங்கு போல இந்த விழாவை நடத்திவரும் நிலையில், இப்புரட்சிகர திருநாளை வர்க்க உணர்வோடும் மக்கள் திருவிழாவாகவும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு விழாவாகவும் இப்புரட்சிகர அமைப்புகள் நடத்தியுள்ளதோடு, பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியைச் சாதித்த போல்ஷ்விக்குகளின் உண்மையான வாரிசுகள் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன.

- பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42646/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# பால், பேருந்து, மின்சாரக் கட்டண உயர்வு! பாசிச ஜெயா கும்பலின் வழிப்பறிக் கொள்ளையை முறியடிப்போம்!

**- தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்**











